அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று நிறுவனம்
சாரங்கா நகை மாடம்
MONEY EXCHANGE
ALL COUNTRIES
WESTERN UNION WU
moving money for better
021 221 7007
இல.157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 02 புதன்கிழமை 18.07.2018 | கதிர் 254

# டெனிஸ்வரன் விடயத்தில் தவறு ஆளுநருடையது என்கிறார் விக்கி



## தன்னை மாட்டிவிடப் பார்க்கின்றார்களா சபை உறுப்பினர்கள் என்றும் அவர் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 18

டெனிஸ்வரன் விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்புக்குக் காரணம் அவரை நான் நீக்கியமை குறித்து ஆளுநர் அரச வர்த்தமானியில் பிரசுரிக்காமைதான் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், சட்டத்துக்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்கப் பண்ணி என்னை மாட்டி விடுவதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் முயல்கின்றனரா என்றும் கேள்வி எழுப்பினார்.

பக்கம் 14

## மானிப்பாயில் பெண் கொலை: கைதானவர் விடுவிப்பு

மானிப்பாயில் மூன்று வாரங்களுக்கு முன் வயோதிபப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த – மனநிலை பாதிக்கப்பட்டவர் –

பக்கம் 14

## இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை அமைக்க சட்டமூலம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூலை 18

யுத்தப் பாதிப்புகளினால் ஏற்பட்டவற்றுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான அதிகார முடைய அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பக்கம் 14

## விஜயகலாவின் பேச்சுக் குறித்து முதல்வர் விக்கியிடமும் விசாரணை

- எஸ்.நிதர்ஷன் -

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த – திட்டமிட்ட குற்றங்களைத் தடுக்கும்

பக்கம் 14

## யாழ். கோட்டைக்குள் மனித எலும்பு எச்சங்கள்?




யாழ்.கோட்டையினுள் இலங்கை இராணுவ முகாம் அமைக்கப்பட்டுவரும் இடத்தில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

பக்கம் 14


## திருவடிநிலை மயானப் புதைகுழியில் மணல் அகழ்ந்தவர்கள் மடக்கிப் பிடிப்பு

### காட்டுப்புலம், பாண்டவெட்டை இளைஞர்கள் அதிரடி




சுழிபுரம் – திருவடிநிலையில் உள்ள மயானத்தில் மணல் அகழ்ந்த டிப்பர் மற்றும் ஜே.சி.பி வாகனங்களுடன் அவற்றின் இரு சாரதிகளும் அப்பிரதேசமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பக்கம் 14


## இனி இது ரகசியம் அல்ல!

சிலருக்கு சில விடயங்கள் கைக் கெட்டியும் வாய்க்கு எட்டாத மாதிரிப் போய்விடுவது உண்டு.

பிரபல விமர்சகர், அரசியல் ஆய்வாளர் தயான் ஜெயதிலகவுக்குக் கிடைத்த ஓர் உயர்ந்த

பக்கம் 03

## அமைச்சரின் பாதுகாப்பில் பாதாள உலகத் தலைவர்கள்!



அவரின் பாதுகாவலர்கள் என்ற பெயரில்

கொழும்பு, ஜூலை 18

பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய தலைவர்கள் ஐவரை பொலிஸ் வலை விரித்துத் தேடி வருகின்றது. ஆனால் அவர்களோ முக்கிய

பக்கம் 14

## 18 இலங்கையர்களை நாடு கடத்தியது ஆஸி!

### தனி விமானத்தில் 36 அதிகாரிகள் கூட்டிவந்தனர்

ஆஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக குடியேறிய 18 இலங்கையர்கள் நேற்று நாடு கடத்தப்பட்ட நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பக்கம் 14

## மணிவண்ணனுக்கு எதிரான வழக்கு ஓக. 3ஆம் திகதிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான மணிவண்ணன், யாழ். மாநகரசபை உறுப்பினராகச் செயற்படுகின்றமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப் பட்ட மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுத்த கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம், இது தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனை எதனையும் எதிர்மனுதாரர்கள் தெரிவிக்க விரும்பின் அதற்குக் கால அவகாசம் வழங்கி வழக்கை

பக்கம் 14

## பாதாள உலகைப் பாதுகாக்கும் அமைச்சர்கள் குறித்து விசாரணை!

### பிரதமர் நேற்று நாடாளுமன்றில் தகவல்

கொழும்பு, ஜூலை 18

பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர்கள் ஐவரை அரசின் அமைச்சர் ஒருவர் பாதுகாக்கின்றார் என வெளியாகியுள்ள செய்தி குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

பக்கம் 14

## மனைவி, 10 மாத மகளிடமிருந்து பிரித்து இளைஞனை நாடு கடத்திய ஆஸ்திரேலியா






இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளரை அவரது பத்துமாத மகள் மற்றும் மனைவி யிடமிருந்து பிரித்து நாடு கடத்தியுள்ளது ஆஸ்திரேலியா.

ஆஸ்திரேலியாவிற்கு 2012ஆம்

பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir



# மரண தண்டனையை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடும் எச்சரிக்கை

மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்தினால், வணிகச் சலுகைகளை இலங்கை இழக்கும் ஆபத்து ஏற்படும் என்று ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

போதைப் பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக மைத்திரிபால சிறிசேன கடந்தவாரம் அறிவித்திருந்தார்.

இதையடுத்து. மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் சிறிலங்கா அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், ஐரோப்பிய நாடுகள் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவதை தடுத்து, மரணதண்டனைக்கு எதிரான இலங்கையின் பாரம்பரியத்தை காப்பாற்றுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் கூட்டாக கோரியுள்ளனர்.

கனடா மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கைக்கு ஆதரவு தெரிவித்து, ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, ருமேனியா, ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இந்த கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி தமது முடிவில் இருந்து பின்வாங்குவார் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும், மரண தண்டனையை நடைமுறைப்படுத்தினால், 28 ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி முன்னுரிமை வாய்ப்புகளை இலங்கை இழக்க நேரிடும் என்றும் ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இலங்கை மரணதண்டனையை நடைமுறைப்படுத்தினால், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை கொழும்பு உடனடியாக இழக்கும் என்று ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திர வட்டாரங்கள் ஏ.எவ்.பியிடம் தெரிவித்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் மோசமான மனித உரிமைகள் நிலைமையால் ஐரோப்பிய ஒன்றியத்தின், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கை இழக்க நேரிட்டது.

7 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த 2017ஆம் ஆண்டிலேயே இந்தச் சலுகை மீண்டும் வழங்கப்பட்டது.

## மரம் முறிந்து வீடு சேதம்!



வட்டவளை – ஞானாந்தகம பகுதியில் வீசிய பலத்த காற்றினால் பெரிய மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ள நிலையில், உயிர் சேதம் எதுவும் இடம்பெறவில்லை எனவும், வீடுகளில் உள்ள பொருள்கள் சேதமடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வீட்டிலிருந்த 4 பேர் தற்காலிகமாக அயலவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மரம் முறிந்து விழுந்ததன் காரணமாக வீட்டின் இரண்டு அறைகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

மேற்படி மரத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸாரும், பிரதேசவாசிகளும் ஈடுபட்டிருந்தனர்.

## மங்களவின் குற்றச்சாட்டு; விளக்கம் கோருகிறது ரஷ்யா!

நாமல் ராஜபக்ஷவின் சிறப்பு பரப்புரை பிரிவுக்கு ரஷ்யா நிதி அளித்தது என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் தெரிவித்த கருத்து தொடர்பாக இலங்கை அரசிடம் ரஷ்யா விளக்கம் கோரியுள்ளது.

கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரக பேச்சாளர் ஒருவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

மங்கள சமரவீரவின் கருத்தை நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அதுகுறித்து சிறிலங்கா வெளிவிவகார அமைச்சிடம் விளக்கம் கோரியிருக்கிறோம் என்றுரஷ்யதூதரக பேச்சாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ ரஷ்யாவிடம் இருந்து உதவிகளைப் பெற்றார் என்று அண்மையில் மாத்தறையில் நடந்த ஒரு கூட்டத்தில் மங்கள சமரவீர குற்றம்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட வர்த்தக நிலைய காணி உரிமம் யாருடையது என தெரியாதாம்!

### 3 மணிநேர விவாதம் நடத்தி வாக்கெடுப்புக்கு சென்ற வவுனியா நகரசபை

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் சட்டவிரோதமாக புதிதாக கட்டப்பட்ட கடைக் காணி உரிமம் யாருடையது என தெரியாது சபையில் மூன்று மணிநேரம் விவாதம் நடத்தி வாக்கெடுப்பு வரை சென்ற சம்பவம் நேற்றைய அமர்வின் போது வெளிச்சத்திற்கு வந்தது.



வவுனியா நகரசபையின் நான்காவது அமர்வு நேற்று தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது நகரசபை செயலாளர் இ.தயாபரன் சபையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி எடுக்கப்பட்ட இல.69 ஹொரவப்பொத்தானை வீதியில்சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புதிய வியாபார நிலையம் தொடர்பானதீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு கடிதம் மூலம் கோரப்பட்டிருந்தார். இதற்கமைவாக இந்த விடயம் தொடர்பான கடிதம் சபையில் வாசிக்கப்பட்டு மீள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் இல 69 இல் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் மூன்று மாடிகளைக் கொண்ட வியாபார நிலையக் காணி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ளதாகவும், நகரசபையே பராமரித்து வந்ததாகவும், இக் காணியில் ஆரம்பத்தில் மரக்கறிக் கடையும் பின்னர் பாட்டா கடையும் இருந்து தற்போது சட்டவிரோதமாக மூன்று மாடிக் கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. நகரசபைக்கு எந்தவித வரிகளும் செலுத்தப்படவில்லை என்பதுடன் பார்த்தீபன் என்பவரது பெயரில் இந்த வர்த்தக நிலையம் பதிவு செய்யப்படவில்லை என்பதும்செயலாளரின் கடிதத்தின் மூலம் தெரியவந்தது.

இதனையடுத்து காணியை விடுவித்து தருமாறு வவுனியா பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுவதாக சபையில் தீர்மானிக்கப்பட்டதுடன், அதன் முடிவின் பின் கடை வழங்குதல் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய தீர்மானிக்கப்பட்டது. இதன்போது காணி யாருடையது என தெரியாது நாம் விவாதம் நடத்தி வாக்கெடுப்புக்கு சென்றோமா என சபை உறுப்பினர்கள் கூறி வருத்தப்பட்டனர்.

இதேவேளை, கடந்த மாத அமர்வில் குறித்த வர்த்தக நிலையம் அமைந்துள்ள காணி நகரசபையினது எனவும் குறித்த வர்த்தக நிலையம் பார்த்தீபன் என்பவரால் கடந்த 18 வருடமாக நடத்தப்படுவதாகவும், அதனை அவருக்கே குத்தகை அடிப்படையில் வழங்க வேண்டும் எனவும் நகரசபை உறுப்பினர்களான லரி, பாயிஸ் ஆகியோர் தெரிவித்த நிலையில், நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன் அதனை கடுமையாக எதிர்த்திருந்த நிலையில் மூன்று மணித்தியாலத்திற்கு மேலாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று கடையை குறித்த நபருக்கு வழங்குவதா அல்லது திறந்த கேள்வி கோரல் மூலம் வழங்குவதா என்று வாக்கெடுப்புக் சென்றது. இதன்போது தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சிறிலங்கா பொதுஜனபெரமுன, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் குறித்த வர்த்தக நிலையத்தை கையகப்படுத்தி வைத்துள்ள பார்த்தீபன் என்ற நபருக்கு வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் வாக்களித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(க – 100)

# பிரித்தானியாவின் மனித உரிமைகள் பட்டியல்; மோசமான 30 நாடுகளில் இடம்பிடித்த இலங்கை

உலகில் மனித உரிமை கரிசனைகள் உள்ள 30 நாடுகளின் பட்டியலில் இலங்கையை தொடர்ந்தும் உள்ளடக்கி இருக்கிறது பிரித்தானியா.

பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகத்தின், 2017 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் ஆண்டு அறிக்கை நேற்று லண்டனில் வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையில், 'மனித உரிமைகள் முன்னுரிமை நாடுகள் என்று 30 நாடுகளின் பட்டியல் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தான், பஹ்ரெய்ன், பங்களாதேஷ், மியன்மார், புரூண்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, சீனா, கொலம்பியா, வடகொரியா, கொங்கோ, எகிப்து, எரித்ரியா, ஈரான், ஈராக், இஸ்ரேல், மற்றும் ஆக்கிரமிப்புப் பகுதிகள், லிபியா, மாலைதீவு, பாகிஸ்தான், ரஷ்யா, சவூதி அரேபியா, சோமாலியா, தென்சூடான், இலங்கை , சிரியா, சூடான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், வெனிசுவேலா, யேமன், சிம்பாப்வே ஆகிய நாடுகள் இந்த மனித உரிமைகள் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

மனித உரிமைகள் நிலைமைகளில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றங்களையே அடைந்துள்ளன என்று கூறியே, முன்னுரிமை நாடுகளின் பட்டியலில் சிறிலங்காவை உள்ளடக்கியிருக்கிறது பிரித்தானியா.

முன்னுரிமை நாடுகளின் மனித உரிமைகள் விடயங்கள் குறித்து தீவிரமான கரிசனை கொண்டுள்ளதாகவும், இந்த நாடுகள், மனித உரிமைகள் சூழலை முன்னேற்றுவதற்கு சாதகமான நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று நம்புவதாகவும் பிரித்தானியா தெரிவித்துள்ளது.

சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்க கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் சிறிலங்கா மிக மெதுவாகவே செயற்படுவது குறித்தும் பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது.

# கடல் வளங்களைத் தாரைவார்ப்பதுதான் நம்மவர் கோரும் சர்வதேசத் தலையீடா?

## டக்ளஸ் எம்.பி. கேள்வி

“மேற்குலகின் போட்டிக் களமாக கிழக்குப்பிரதேசத்தை மாற்றுவதற்கே இந்த அரசு தற்போது செயற்பட்டு வருவதாக எமது மக்கள் மத்தியில் கருத்துக்கள் நிலவுகின்றன.

“அந்தவகையில், ‘சர்வதேசம் தலையிட வேண்டும். சர்வதேசம் தலையிட வேண்டும்’ என எதற்கெடுத்தாலும் சில தமிழ்த் தலைவர்கள் கூறுகின்றமை போல், அந்த சர்வதேச தலையீடு இது தானா? எனக் கேட்க விரும்புகின்றேன்” – என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற – இலங்கை ஜன நாயக சோசலிசக் குடியரசிற்கும், சிங்கப்பூர் குடியரசிற்கும் இடையிலான – வர்த்தக ஒப்பந்தம் பற்றிய சபை ஒத்திவைப்பின் போதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

இறக்குமதிகள், வரி அற வீடுகள், விற்பனைகள் என்ற முக்கோண நிலையில் – அதாவது உள்ளூர்உற்பத்திகளை – ஏற்றுமதிகளைப் பற்றிக் கவலைப்படாத இறக்குமதிகள், மக்களின் வறுமை நிலைமையைப் பற்றிக் கவலைப்படாத வரிகள் விதிப்பு, நாட்டைப் பற்றி கவலைப்படாமல் நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்தல் என்ற முக்கோணத்தில் இந்தநாடு திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில், இத்தகைய வர்த்தக மற்றும் ஏனைய ஒப்பந்தங்கள் குறித்தும் பேசப்பட்டு வருகின்றது.

இலங்கை – சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தத்திற்கு வருவதற்கு முன்பதாக, இன்னுமொரு ஒப்பந்தம் தொடர்பிலான சில சந்தேகங்களை இங்கே வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

திருகோணமலையைமையப் படுத்தியதாக வடக்கில் முல்லைத்தீவிலிருந்து, கிழக்கில் மட்டக்களப்பு வரையிலான கடற்பிரதேசங்களை உள்ளடக்கியதாக எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளல் என்ற பெயரில் அமெரிக்காவின் சுலும் பேக்கர் என்ற நிறுவனம், இலங்கையின் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சுடன் கடந்த மே மாதம் 30ஆம் திகதி ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இத்தகைய திட்டங்கள் இந்த நாட்டில் ஏனைய கடற் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன என நீங்கள் கூறினாலும், அது எந்தளவிற்கு சாத்தியமாகும் என்பதை உங்களால் கூற முடியாது என்றே நான் கருதுகின்றேன். ஏனெனில், இத்திட்டத்தின் நோக்கமானது கிழக்குக் கடற் பிரதேசங்களை மாத்திரமே இலக்காகக் கொண்டு,அமெரிக்காவின் இராணுவ கேந்திரநலன்களுடன் ஒன்றைக் கலந்ததாக இருப்பதாகவே தெரிய வருகின்றது.

2016ஆம் ஆண்டு கால கட்டத்திலும் இத்தகைய கிழக்குக் கடற் பிரதேசத்தில் எண்ணெய் வளஆய்வுகளை மேற்கொள்ளப் போவதாகக் கூறப்பட்டு பிரெஞ்சு நிறுவனமான டோடல் – எனும் நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டு, பின்னர் அந்த ஒப்பந்தம் கைவிடப்பட்டமைக்கும், தற்போது அதேவிதமானதோர் ஒப்பந்தம் அமெரிக்க நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ளமைக்கும் இடையில் தொடர்புகள் ஏதேனும் இருக்கின்றனவா எனக் கேட்க விரும்புகின்றேன்.

அதே நேரம், இத்தகைய திட்டங்களின் ஊடாக வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தற்போது நிலை கொண்டுள்ள குடிப் பரம்பலை சிதைத்துவிட்டு, பல்வேறு குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன எனவும் எமது மக்கள் மத்தியில்சந்தேகங்கள் எழுந்துள்ளன. – என்றார்.

# பரீட்சை முறைகேடுகளைத் தவிர்க்க மேலதிக நிலையப் பொறுப்பதிகாரி!

பரீட்சை முறைகேடுகளைத் தவிர்க்கும் நோக்கில், அனைத்துப் பரீட்சை மத்திய நிலையங்களிலும் மேலதிக நிலையப் பொறுப்பதிகாரியொருவரை நியமிக்கப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கிணங்க இந்த மேலதிக நிலையப் பொறுப்பதிகாரி ஊடாக பரீட்சைக் கண்காணிப்புக்கள் மேற்பார்வை செய்யப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ. பூஜித தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, பரீட்சை மத்திய நிலையங்களுக்குக் கொண்டுவரப்படும் தொலைபேசி உள்ளிட்ட மின்னணு சாதனங்களை முடக்குவதற்கான நடவடிக்கைகளும் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தவுள்ளன எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ளது.

இம்முறைஉயர்தரப்பரீட்சையில் பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 21 ஆயிரத்து 469 பேர் தோற்றவுள்ளனர். 2,267 பரீட்சை மத்திய நிலையங்கள் மற்றும் 311 ஒருங்கிணைப்பு மையங்கள் இதற்காகச் செயற்படவுள்ளன.

இது தவிர, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இப் பரீட்சையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் மூன்று லட்சத்து 55 ஆயிரத்து 326 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இப் புலமைப்பரிசில் பரீட்சை 3,050 பரீட்சை மத்திய நிலையங்களில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ. பூஜித மேலும் குறிப்பிட்டுள்ளார்

# வன அடர்த்தியை அதிகரிப்பதில் இலங்கை மிகவும் மும்மரம்

## ரோம் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு



பேண்தகு அபிவிருத்தி இலக்கினை அடைந்துகொள்வதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாக இலங்கை அதன் தற்போதைய வனப் பிரதேசத்தை பாதுகாப்பதற்கும் அதனை 32 வீதமாக அதிகரிப்பதற்கும் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுவதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உலக வன வாரத்தை முன்னிட்டு நடைபெறும் உலக வனப் பாதுகாப்பு குழுவின் 24 ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இம்மாநாடு ரோமில் உள்ள ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

காடுகள் அடிப்படை மனிதத் தேவைகளான உணவு, சக்தி வளம் மற்றும் உறைவிடம் உள்ளிட்ட பல்வேறு சமூக பொருளாதார நன்மைகளை வழங்குகின்றன. இந்த தேவைகளையும் ஏனைய தேவைகளையும் அடைந்துகொள்வதற்கு உதவுகின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகளை நிலையாக பேணுவதற்குக் காடுகள் பேண்தகு அடிப்படையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.

பூகோள வனத்துறையின் முன்னேற்றத்திற்கான தீர்மானங்களை மேற்கொள்ளவும் அது தொடர்பான அறிவைப் பகிர்ந்துகொள்ளவும் மேலும் கலந்துரையாடல், விவாதங்களை மேற்கொள்ளவும் வனப் பாதுகாப்பு தொடர்பான இந்த மாநாடு ஒரு சிறந்த தளமாகும்.

இனி வருகின்ற நிகழ்ச்சி நிரல் விரிவானதாகவும் சவால் மிக்கதாகவும் இருந்த போதும் அதனை வெற்றிகொள்வதற்கு அனைத்து நாடுகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட பகுதிகள் வனப் பிரதேசங்களாகவே இருந்து வந்துள்ளன.

தற்போது நாட்டின் மொத்த வன அடர்த்தியானது மொத்த நிலப்பிரதேசத்தில் 29 வீதமாக குறைவடைந்துள்ளது. பாரியளவிலான விவசாய முயற்சிகள் மற்றும் குடியேற்றங்களுக்காக காணிகள் பயன்படுத்துவதால் காடுகள் அழிக்கப்பட்டதன் காரணமாகநாட்டின்வனப்பிரதேசம் குறைந்து வருகின்றது. இதன் காரணமாக பல சூழல் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. .

மீள்காடாக்கல் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. 2020ஆம் ஆண்டாகும்போது நாட்டில் ஐந்து மில்லியன் மரங்களை நடும் திட்டம், சூழலையும் நீர் நிலைகளையும் பாதுகாக்கின்ற வகையில், கடல்மட்டத்திலிருந்து 5,000 அடி உயர நிலப்பகுதியில் இருக்கின்ற மரங்களை வெட்டுவதைத் தடைசெய்தல் மற்றும் அனைத்து பாடசாலை பிள்ளைகளும் குறைந்தது ஒரு மரக்கன்றை நாட்டுவதற்கு ஊக்குவிக்கின்ற நிகழ்ச்சித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பதவிகூட அப்படிக்கைக்கெட்டியும் வாய்க் கெட்டாததாகப் போய் விடுமோ என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. பாவம் அவர்.

அதிகாரத் தரப்புடன் எப்போதும்நெருக்கமாக இருப்பவர் போல் காட்டிக் கொள்ளும் தயான் ஜெயதிலக தம்மை ஓர் அறிவுஜீவி போல வெளிப்படுத்தும் விமர்சனங்களையும் அவ்வப்போது அள்ளி வெளியிட்டுப் பரப்பை ஏற்படுத்துபவர்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் ஜெனீவாவில் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்த அவர், 1988 இல் வரதராஜப் பெருமாள் தலைமையில் ஈ.பி. ஆர்.எல்.எவ். வடக்கு – கிழக்கு மாகாண அரசை அமைத்த போது அதில் ஓர் அமைச்சர் என்றால் பாருங்களேன். தமிழர்களுக்கான மாகாண அரசு ஒன்று தோற்றம் பெற்ற போது அதன் ஐந்து அமைச்சர்களுள் ஓரிடத்தைத் தமிழ்க் கட்சி சாரபில் பெற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு அதிகாரத் தரப்பைத் தமது ஆளுமையால் விழுத்தக் கூடியவர்.

2015 ஜனவரியில் ஆட்சி மாறியதும் சற்று ஓரம் கட்டப்பட்டார். ஒருவாறு மைத்திரியைத் தமது வலையில் வீழ்த்தி, இப்போது ரஷ்யாவுக்கான இலங்கைத்தூதுவர்நியமனத்துக்கான வாய்ப்பை அவர் பெற்ற போது பலரும் வியந்து போனார்கள். சில வாரங்களுக்கு முன் அந்தச் செய்தி காதில் விழுந்த அன்று, அகமஸ்தாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பில் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

*“என்ன தயான் (ஜெயதிலக) உங்களுக்குப் பின்னால் என்று நினைத்திருந்தேன். இப்போது என்னவென்றால் ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆளாக ரஷ்யத் தூதுவராகப் போகிறாராமே?”* – என்ற பாணியில் ஒரு கொழுக்கி போட்டேன்.

மஹிந்தர் ஓர் ஏளனச் சிரிப்புச் சிரித்தார். *“கடந்த வாரம் என்னிடம் வந்தார். ஆசீர்வாதம் பெற்றுச் சென்றார்.”* – என்றார்.

தயான் பிழைக்கத் தெரிந்தவர் என்று நினைத்துக் கொண்டேன். மைத்திரியை சமாளித்து, மஹிந்தவையும் தாஜா செய்யும் தகைமை உள்ளவர் என்று கருதிக் கொண்டேன்.

ஆனாலும் மைத்திரியின் சமாளிப்பும் மஹிந்தவின் ஆசீர்வாதமும் கூட வேலைக்கு உதவாது என்ற நிலைமை இப்போது அவருக்கு.

தூதுவர் போன்ற நியமனங்களுக்கு அரசுத் தலைமையிடம் பச்சைக் கொடி ஆதரவு பெற்றுக் கொண்டாலும் ‘ஆசாரி இடம் கெடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்காத மாதிரி’ இடையில் சிவப்புக் கொடி காட்டி மறிக்கும் ஒரு கண்டம் உள்ளது.

அதுதான் உயர்பதவிகள் தொடர்பான நாடாளுமன்றக் குழு. சபாநாயகர் தலைமையிலான இந்தக் குழுதான் அமைச்சர்களின் செயலாளர்கள், வெளிநாட்டுத் தூதுவர்களுக்குத் தலைவர்களாக நியமனம் பெறுவோர் மற்றும் அரச சபைகள், பெரு நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியவர்களின் பதவிப் பொருத்தத்தை ஆராய்ந்து அங்கீகரிக்க வேண்டும்.

பதினைந்து பேர் கொண்ட இந்தக் குழுவில் தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் மாவை, சித்தார்த்தன், சுமந்திரன் ஆகியோரும் ஜே.வி.பி. சார்பில் விஜித ஹேரத், பிமல் ரட்னாயக்கா ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

நேற்று மாலை இந்தக் குழு கூடியது. மாவையும் சித்தரும் வெளிநாட்டில் என்பதால் கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை.

ரஷ்யத் தூதுவராகத் தயான் ஜெயதிலகவை அங்கீகரிக்கலாமா என்ற விடயம் நேற்று எடுக்கப்பட்ட போது கூட்டமைப்பும், ஜே.வி.பியும் அவருக்கு எதிராக ஒரு பிடிபிடித்துத் தள்ளின என்று அறிய வந்தது.

அதனால் அப்பதவிக்கான அங்கீகாரம் அவருக்கு நேற்றுக் கிட்டவில்லை. அவர் தொடர்பில் மேலும் விவரங்கள் கோரிப் பெற்று ஆராய்ந்து முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

இனி ஓகஸ்ட் 8 ஆம் திகதி தான் அக்குழு கூடும். அப்போது திரும்பவும் அவர் விவகாரம் பரிசீலனைக்கு வரும். ஆனால் குழுவில் காட்டப்படும் எதிர்ப்பை நோக்கும் போது அதைத் தாண்டி அவருக்குப் பச்சை கொடி காட்டப்படுவது துர்லபம் என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

இதுதான் கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாதது என்பதா?

-மின்னல் -

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com

தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk

விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## மரண தண்டனைக் கூத்து

அதிகாரிகளின் பேச்சை கேட்டு, எந்த விடயத்தையும், ஆராயாமல், திடுதிப்பென அறிவிக்கும் அரசியல்வாதிகள், பின்னர் அதன் விளைவை எதிர்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

மரணதண்டனை நிறைவேற்றும் விவகாரத்திலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட அறிவித்தல் கூட இத்தகைய அவசரக் குடுக்கைத்தனத்தின் விளைவே என்று சிந்திக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் மோசமான தண்டிப்பு முறையை நவநாகரிக உலகம் துறந்து பல தசாப்தங்களாகிவிட்டன.

இலங்கையும் கூட அதற்கு விதிவிலக்கல்ல. தற்போதைய அரசமைப்பு நடைமுறைக்கு வர முன்னரே – சுமார் நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பே – மரணதண்டனையை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை இலங்கை அடியோடு நிறுத்தி விட்டிருந்தது.

சட்டப் புத்தகங்களில் உள்ள ஏற்பாடுகளின்படி அதி உச்சத் தண்டனையாக மரண தண்டனையை நீதிமன்றங்கள் விதிக்கும். ஆனால் அது நாட்டில் வழமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அதற்குப் பதிலாக அத்தகையோரின் தண்டனை ஆயுட்சிறையாகவே மாற்றப்பட்டு வந்தது.

அப்படியிருக்க, இப்போது மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு அந்தத் தண்டனையை நிறைவேற்றுவதற்கான திகதிகளை ஜனாதிபதி உடனடியாகத் தீர்மானித்துப் பரிந்துரைப்பார் என்றும், அந்தத் தீர்மானப்படி மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

அமைச்சரவை கூடி ஆராய்ந்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இந்த முடிவை அறிவித்ததினால் நவநாகரீக சமூகத்தின் – சர்வதேச சமுதாயத்தின் – இழி சொல்லுக்கு இலங்கை ஆளாகியுள்ளது.

கடந்த நான்கு தசாப்த காலமாகத் தான் கட்டி வளர்த்த பெருமையை – கீர்த்தியை – இலங்கை ஓர் அறிவிப்பு மூலம் மண்ணாக்கியது என சர்வதேச மன்னிப்புச் சபை குறை கூறியது கூடச் சரியான கருத்துத்தான்.

“மரண தண்டனை, மனித குலத்தின் கௌரவத்திற்கும் மாண்புக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானது. மீண்டும் குற்றங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கக் கூடிய திறனை மரணதண்டனை கொண்டிருக்கவில்லை. ஆனால் தவறான தீர்ப்புகள் காரணமாக அநாவசியமான உயிரிழப்புகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய அவலத்தை இந்த முடிவு ஏற்படுத்தி விடலாம். எனவே மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் திட்டத்தைக் கைவிட்டு விடுங்கள்.” – என்று ஐரோப்பிய நாடுகள், கனடா போன்றவையும், பெரும்பாலான சர்வதேச சமூகத் தரப்புகளும் இலங்கைக்கு ஆலோசனை கூறத் தொடங்கியுள்ளன.

இவ்வளவும், மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் சிறையில் இருந்தவாறே போதை வஸ்துக் கடத்தல் செயற்பாட்டைக் கண்காணித்து வழி நடத்தி வருகின்றார்கள் என்றும் –

அவர்களைக் கட்டுப்படுத்தி, அடக்குவதற்கு ஒரே வழி அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதுதான் என்றும் –

அதிகார வர்க்கம் கொடுத்த ‘கயிறை’ விழுங்கிக் கொண்டுதான் இந்தளவு விவகாரங்களும் நடந்திருக்கின்றன.

மரண தண்டனைக் கைதிகளைக் கட்டுப்படுத்தி, சட்டம், ஒழுங்குக்கு அமைய அவர்களை வழிப்படுத்தத் தெரியாத அதிகார வர்க்கம், ஆளும் தரப்பின் தலைவர்களுக்கு இப்படி ஆலோசனை வழங்கியிருப்பதும், அதை அவர்கள் அப்படியே உள்வாங்கி செயற்பட முனைந்திருப்பதும் ஆச்சரியமானவைதான்.

தூக்குத் தண்டனைக் கைதிகளாக சிறையில் இருந்தபடி, போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபடுபவர்கள் என்று கூறப்படும் – சர்ச்சைக்குரிய – நபர்கள் எல்லோரும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர். அந்த மேன்முறையீட்டின் விசாரணைகள் முடிவுக்கு வர முன்னர் அவர்களை ஜனாதிபதியாலும் தூக்கிலிட முடியாது.

அப்படி இருக்கையில், அவர்களை அடக்குவது என்ற பெயரில் மீண்டும் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துதல் என்ற அபத்தத் தந்திரோபாயத்தைக் கையில் எடுத்து, தனது கீர்த்தியை நாறடித்திருக்கின்றது இலங்கை ஆட்சிப் பீடம் என்றே கூறவேண்டும். மரண தண்டனை நடைமுறைக்கு என்ற அறிவிப்பு பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக முடிந்த கதையாகி விட்டது.

# காணி விடுவிப்புக் குறித்து இராணுவம் அண்டப் புளுகு

## முதலமைச்சர் சீற்றம்



**முதலமைச்சர் வின்னேஸ்வரனின் இவ்வார கேள்வி - பதில் விவரம் வருமாறு:-**

**1.கேள்வி** – வடமாகாணசபை கலைக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அவைத்தலைவர் கூறுகின்றாரே. அதில் உண்மையுள்ளதா?

**பதில்** – இல்லை. ஒரு மாகாணத்தின் ஆளுநர் தானே பிழை செய்து விட்டு தன் பிழையை வைத்தே மாகாண ஆட்சியைக் கலைக்க முடியுமென்றால் மத்திய அரசாங்கம் அதைச் செய்தே எல்லா மாகாண சபைகளையும் கலைத்துவிடலாம். மேன்முறையீட்டுமன்றின் தீர்ப்புக் குக் காரணம் எமது ஆளுநர் அரச வர்த்தமானியில் டெனீஸ்வரனை நான் நீக்கியது பற்றி பிரசுரிக்காமையே. வடமாகாணசபை சார்பாக ஆளுநர்தானே ஒரு முக்கியமான செயலைச் செய்யாதுவிட்டு அதை முன்வைத்து வடமாகாண சபையை கலைக்க சட்டம் இடம் கொடுக்காது. அவைத்தலைவர் தொடர்ந்து எமது பதவிக்காலம் வரையில் அவைத் தலைவராகவே இருக்கலாம்!

**2.கேள்வி** – முழுமையான அமைச்சரவையை உருவாக்கும் ஆலோசனையை ஆளுநருக்கு வழங்குங்கள் என்று உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் தீர்மானம் எடுத்துள்ளார்களே?

**பதில்** - முதலமைச்சருக்கு நியமிக்கும் அல்லது பதவி இறக்கும் உரித்தில்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியிருக்கும் போது நான் எவ்வாறு ஆலோசனை வழங்குவது? சட்டத்திற்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்கப் பண்ணி என்னை மாட்டிவிடப் பார்க் கின்றார்களா எமது உறுப்பினர் கள்? ஆளுநர் செய்த பிழையை ஆளுநரே சரி செய்ய வேண்டும். டெனீஸ்வரனை நான் பதவி நீக்கம் செய்தமையை அரச வர்த்தமானியில் பிரசுரிக்காத குறையை இப் பொழுதும் நீக்கலாம். அதாவது 2017 ஓகஸ்ட் 20 ஆம் திகதி தொடக்கம் பயன்பாட்டிற்கு வரும் வகையில் இப்பொழுதும் கடந்த காலத்தை அளாவிய விதத்தில் அரச வர்த்தமானியில் பிரசுரம் இடம்பெற ஆளுநர் நடவ டிக்கை எடுக்கலாம். அதன் பின் குறித்த வர்த்தமானி அறிவித்தலை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்டி மேன்முறை யீட்டுத் தீர்மானத்தைப் புறம் வைக்கலாம்.

**3.கேள்வி** – வடக்கில் இராணுவத்தின் வசம் இருந்த 92 சதவி கி தமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன என இராணுவம் கூறியுள்ளதே? இது உண்மையா?

**பதில்** – புளுகு, அண்டப்புளுகு, புள்ளிவிவரங்கள் என்று கூறுவார்கள் ; (Lies, Bloody lies and Statistics). அது போல்தான் இவ்விடயம் அமைகின்றது. நாங்கள் பதவிக்கு வந்த போது அதாவது 2013 கடைசியில் வலிகாமம் வடக்கில் சுமார் 6500 ஏக்கர் மக்கள் காணி இராணுவத்தினர் கைவசம் இருந்தது. இப்பொழுது அவற்றில் 1/2 வாசி மட்டில் கொஞ்சம் கொஞ்சமாக கையளித்துள்ளார்கள். அதை 92 சதவிகிதம் என்று கூறுவது தாங்கள் 2009ல் கைவசம் வைத்திருந்த காணிகளின் விகிதாசார அடிப்படையில் தற்போது 8 சதவிகிதமே மிகுதி உள்ளதென்பதையே அவர்கள் கூறுகின்றார்கள். இது யாழ் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கில் மட்டுமே.

நாம் பதவியேற்ற போது 65,000 ஏக்கர் காணிகளை வடமாகாணம் முழுவதிலும் படையினர் கையகப் படுத்தி வைத்திருந்தார்கள். அவற் றுள் பெரும்பான்மை அரச காணிகள். அவற்றைப் பற்றி எதுவும் கூறாமல் 92 சதவிகிதம் கையளித்து விட்டதாகக் கூறுவதன் அர்த்தம் அரச காணிகளைத் தாம் தான்தோன்றித் தனமாய் ஆயிரம் வருடங்களுக்குந் தொடர்ந்து வைத்திருக்கலாம் என்ற எண்ணத்தில். சுமார் 60,000 ஏக்கர் வடமாகா ணக் காணிகள் இப்பொழுதும் படையினர் வசம் இருக்கின்றன என்பதே எமக்குத் தரப்பட்ட ஏற்றுக் கொள்ளக்கூடிய புள்ளி விவரங்கள்.

4.படையினர் முதலமைச்சரிடம் அனுமதி கேட்டு வைத்திய சாலைகளில் புள்ளி விவரங்கள் கேட்க வேண்டிய அவசியமில்லை என்று இராணுவத்தினர் கூறுகின்றார்களே?

**பதில்** - இன்னமும் அவசர கால நிலைமை நீடிப்பதாக படையினர் நினைக்கின்றார்கள். அவசரகாலச் சட்டம் இல்லாத தற்காலத்தில் எந்த ஒரு அரச நிறுவனத்தில் சென்று விவரங்கள் சேகரிப்பதென்றாலும் அவை அந்நிறுவனங்களின் தலைமை அதிகாரியின் அனுமதியுடனேயே நடைபெற வேண்டும். தம்பாட்டுக்குப் போய் பாதுகாப்பு என்ற அடிப்படையில் எதுவும் கேட்க முடியாது. அதற்கு சட்டம் இடம் கொடுக்காது. பாதுகாப்பு என்ற போர்வையில் பலவிதமான அட்டூழியங்களைப் படையினர் இதுகாறும் புரிந்துள்ளார்கள். போர்க் குற்றங்கள் அவற்றுள் அடங்குகின்றன. எனவே இவ்வாறான தருணங்களில் பாதுகாப்பு படையினரின் முறையற்ற நடவடிக்கைகளை மக்களுக்கு எடுத்துரைப்பது அவசியம்.

அத்துடன் போர்முடிந்து 9 வரு டங்கள் நிறைவடைந்த பின் பாதுகாப்பு, பாதுகாப்பு என்று பயமுறுத்தும் படையினர் அந்தப் பாதுகாப்புக்கான காரணங்கள் என்ன என்பதை எங்களுடன் பேசி முடிவுக்கு வர வேண்டும். வெளிநாடுகளிடமி ருந்து எமக்கு பாதுகாப்புத் தேவைப்படுகிறதா உள்நாட்டில் தேவைப்படுகின்றதா என்பதை அவர்கள் கூற வேண்டும். வெளிநாடுகளைக் குறிப்பிட்டு தேசிய பாதுகாப்பைப் பற்றிக் கூறுவது ஒன்று. தேசிய பாதுகாப்பு வேண்டுமெனில் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் சும்மா பாதுகாப்பு பாதுகாப்பென்று மக்களின் காணிகளைப் பிடித்துக் கொண்டும் வருவாயை எடுத்துக் கொண்டிருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் இவர்கள் தாம் நினைத்தவாறு வைத்தியசாலையினுள் நுழைந்து தரவுகள் சேகரித்தால் பொலிஸாரின் அதிகாரங்களை படையினர் கைவசப்படுத்தியதாக அமையும். உண்மையில் இராணுவத்தினர் இவ்வாறான புள்ளி விவரங்களை வைத்தியசாலைகளில் இருந்து சேகரிக்க வேண்டுமென்றால் பொலிஸாரை நாடி அவர்கள் ஊடாகவே இதைச் செய்ய வேண்டும். இராணுவத்தினருக்குப் போர்க்காலம் போல் இப்பொழுதும் அதிகாரங்கள் இருக்கின்றன என நினைப்பது தவறு. உண்மையில் வடமாகாணத்தில் படையினர் தொடர்ந்திருக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை. அரசியல் காரணங்களே அவர்களை இங்கு நிலை நிறுத்தியுள்ளன.

5.வடக்கில் சாதாரண மக்களையும் இராணுவத்தினரையும் பிரிக்க நீங்கள் எத்தனிப்பதாக இராணுவத்தளபதி மகேஷ் – சேனநாயக்க கூறியுள்ளாரே? அது பற்றி?

**பதில்** – மகேஷ் எனது நண்பர். அவர் கூறுவது அந்த வரையில் உண்மை. எமது மக்களும் இராணுவத்தினரும் நெருக்கமாக இருக்கின்றமையை நான் விரும்பவில்லை. காரணம் அந்த நெருக்கத்தைக் காட்டி இராணுவம் இன்னும் 1000 வருடங்களுக்கு எமது பிரதேசங்களில் இருந்து வர எத்தனிக்கும். அதனால் பாதிப்படையப் போவது எமது இனமே. இராணுவத்தின் வேலை வடமாகாணத்தில் முடிவடைந்தபடியால் அவர்கள் திரும்ப கொழும்பு செல்வதே முறையானது. அப்படி இராணுவம் தரித்து நிற்க வேண்டுமென்றால் நான் ஏற்கனவே கூறியுள்ளேன் இராணுவத்தை ஒன்பதாகப் பிரியுங்கள்! ஒன்பதில் ஒரு பங்கை வேண்டுமெனில் ஒவ்வொரு மாகாணத்திலும் நிறுத்துங்கள் என்று. சலுகைகளையும் சல்லியையும் தந்து இராணுவம் இங்கு நிலைபெற நினைப்பது அவர்கள் எம்மைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காகவே! எங்கள் மீது கரிசனை இருப்பதால் அல்ல. இவற்றை எம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெரும்பான்மையினரின் அரசியலுக்கு எமது சாதாரண மக்களின் வறுமையைப் பாவித்து இராணுவத்தினர் உதவ வருவது சரி போல் தெரியும். வருங்காலத்தில் பாதிக்கப்படப் போவது எமது இன மக்களே. படைகளில் சிலருக்கு தெற்கில் ஒரு குடும்பம் வடக்கில் ஒரு குடும்பம் இருப்பது நாடறிந்த உண்மை.

அடுத்து அரசாங்க திணைக்களங்கள் தகவல்கள் இராணுவத்தினருக்கு வழங்குவது பற்றியும் நண்பர் கூறியிருந்தார். அது பற்றி ஏற்கனவே பதில் கூறியுள்ளேன். இராணுவத்தினர் தமது பணிகளை நிறுத்தப்போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

19.07.2018

வியாழக்கிழமை

நட்சத்திரம் : அத்தம் பி.ப. 2.00 வரை

திதி : ஸப்தமி மு.இ. 7.34 வரை

சுபநேரம் : 7.31 – 9.01 வரை

இராகுகாலம் : 1.31. – 3.01 வரை

# தீப்பெட்டிக் கைத்தொழில் துறையினர் ஆர்ப்பாட்டம்

## கண்டி செயலகத்துக்கு முன்







தீப்பெட்டிக் கைத்தொழில் துறையினர் நேற்று கண்டி மாவட்ட செயலகத்திற்கு முன் பிரதான பாதையில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் நேற்று ஈடுபட்டனர்.

தீக் குச்சிகள் மற்றும் தீப்பெட்டிகள் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருள்களை அரசு இறக்குமதி செய்யாததன் காரணத்தால் நாட்டிலுள்ள 11 தீப்பெட்டி உற்பத்தி தொழிற்சாலைகளும் செயலிழந்துள்ளமையால், சுமார் 8000 இற்கும் அதிகமான ஊழியர்கள் தமது வேலையை இழக்க நேரிட்டுள்ளது.

இப் பிரச்சினைக்கு உடனடியான தீர்வை வேண்டி அரசை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்று கண்டி மாவட்ட செயலகத்திற்கு முன் பிரதான பாதையில் இடம்பெற்றது.

கண்டி மணிக் கூண்டுக்கோபுரத்திற்கு முன்பாக இருந்து ஊர்வலமாக வந்த அவர்கள் மாவட்டச் செயலகத்தின் முன் பாதையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுள் சிலருக்கு கண்டி மாவட்ட மேலதிக செயலாளர் ஜே.பீ.கே. ஜயரத் னவைச் சந்தித்து இவர்களது வேண்டுகோள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளிக்க இடம் கொடுக்கப்பட்டது.

இவ் இடத்திற்கு சமூகமளித்த மத்திய மாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபர் டீ. எம்.ஆர். ரணவீர பாதுகாப்புச் செயலாளரின் செய்தி ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அறிவித்தார்.

அதன் படி தீக் குச்சிகள் மற்றும் தீப்பெட்டிகள் தயாரிப்பதற்குத் தேவையான 200 மெட்ரிக்தொன் மூலப்பொருள்களை எதிர்வரும் இரு வாரங்களுக்குள் இறக்குமதிசெய்து தருவதாகவும் , அதன் பின் தொடர்ந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் ஓரிரு தினங்களில் பாதுகாப்புச் செயலாளரை சந்திக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அறிவித்ததை அடுத்து இதனை ஏற்றுக் கொண்டு பாதுகாப்பு செயலாளரை சந்தித்த பின் மேலும் தீர்வு கிடைக்காவிட்டால் கொழும்புக்குச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் எனக் கூறினார்கள். அதைத் தொடர்ந்து சுமார் 3 மணித்தியாலம் இடம்பெற்ற ஆர்ப்பாட் டம் முடிவுக்கு வந்தது.

# கசினோ மூலம் பெறப்பட்ட பெருந்தொகை பணத்துடன் 4 வெளிநாட்டவர்கள் கைது!

இலங்கையில் கசினோ மூலம் பெற்ற பெருந்தொகை வெளிநாட்டுப் பணத்துடன் விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டவர்கள் நால்வரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நால்வரில் இருவர் சீனப் பிரஜைகள் எனவும் ஏனைய இருவரும் நேபாள நாட்டவர்கள் எனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீன நாட்டவர் 30 மற்றும் 33 வயதுடையவர்கள் எனவும் நேபாள நாட்டவர்கள் இருவரும் 20 மற்றும் 25 வயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அந்தப் பணத்தை பயணப்பொதி மற்றும் காற்சட்டை பைக்குள் மறைத்து வைத்தக்கொண்டு செல்லும் போதே சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டது 169,900 அமெரிக்க டொலர் எனவும் அதன் இலங்கை நாணயப் பெறுதி 2 கோடியே 75 லட்சத்து 24 ஆயிரம் ரூபாவெனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கு வந்து கசினோ விளையாட்டின் மூலம் பெறப்பட்ட பணம் என அவர்களிடம் சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட நால்வர் மீது விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

# சுத்தமான குடிதண்ணீர் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

திஸ்ஸமஹாராம, கதிர்காமம் பிரதான வீதியில் போகஹபெலஸ்ஸ பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பிரதேச மக்கள் சுத்தமான குடிதண்ணீரை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம் செய்தமையால் போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால் திஸ்ஸமஹாராம, கதிர்காம பிரதான வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது

# கணினி மூலம் பஸ் ஆசனங்கள் ஒதுக்கும் வசதிகள் விஸ்தரிப்பு




கொழும்பு, ஜூலை 18

பயணிகள் இணைய வழியாக பஸ் ஆசனங்களை ஒதுக்கிக் கொள்ள வழிவகுக்கும் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் எஸ்.எல்.ரி.பி.எக்ஸ்பிரஸ் என்ற சேவையின் ஊடாக இந்த வசதி கிடைக்கிறது.

இணைய வசதிகளைக் கொண்ட திறன்பேசிகள் அல்லது கணினியின் ஊடாக இதற்குரிய செயலியைப் பயனப்டுத்தி கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ்களில் ஆசனங்களை ஒதுக்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இதன் மூலம் புறக்கோட்டை பஸ் நிலையத்திற்குச் சென்று தூர இடங்களுக்கான பஸ் சேவைகளில் ஆசனங்களை ஒதுக்கிக்கொள்வதற் கான பண விரயமும், நேர விரயமும் தவிர்க்கப்படுவதாக போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

# கணவனின் கத்திக்குத்துக்கு இலக்காகி மனைவி உயிரிழப்பு

நாரம்மல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லங்குவ பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கத்திக்குத்துக்கு இலக்கான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்லங்குவ பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறிய நிலையில் கணவனால் மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகிய மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நாரம் மலையைச் சேர்ந்த 24 வயதுடைய இஷார கிம்மானி என்பவராவார்.

அத்துடன் இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைதுசெய்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குழந்தைக்கு மதுபானம் பருக்கிய நால்வர் கைது!

அனுராதபுரம், மீகவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனங்கமுவ பகுதியில் ஒரு வயது குழந்தையொன்றுக்கு மதுபானம் பருக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரை மீகவெவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மீகொல்லேவெவா பகுதியில் நேற்றுமுன்தினம் வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வின் போது குழந்தையின் தந்தை மது அருந்தி விட்டு கையில் வைத்திருந்த தனது குழந்தைக்கு மது பருக்கும் காட்சியொன்றைக் காணொலி மூலம் பதிவிட்டு சமூக வலைத்தளங்களில் பகிர்ந்திருந்தனர். இந்தக் காணொளியை அடிப்படையாகக்கொண்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட மீகவெவ பொலிஸார் குழந் தையின் தந்தை உட்பட நால்வரை கைது செய்துள்ளனர்.

# மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 18

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகர் பகுதிகளிலும் –

**வவுனியா பிரதேசத்தில் –**

பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், கொக்கெலிய இராணுவமுகாம் பிரதேசம், கொக்கெலியவிலிருந்து ஓமந்தை நகரம், ராஜா மீன்பிடிவலைத் தொழிற்சால் Union Alliance Ltd, உயர் தொழில்நுட்பக் கல்லூரி ஓமந்தை, சமனன்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, மகாமயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

மடுச்சந்தியிலிருந்து பூமலர்ந் தான் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# விமானப் படையின் கண்காட்சி நாளைமறுதினம் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 18

இலங்கை விமானப் படையின் 2018 ஆம் ஆண்டுக்கான கண்காட்சி (AIR TATTOO - 2018) நாளைமறுதினம் 20 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையில் வீரவில விமான நிலைய முகாமில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமானப் படை ஆரம்பம் முதல் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றிய பணிகள் மற்றும் சேவைகள் தொடர்பில் மக்களுக்கு தெரியப்படுத்துவது இந்தக் கண்காட்சியின் நோக்கம் எனவும் கூறப்படுகின்றது.

விமான சாகசங்கள், விமானப் படையின் விமானங்கள் தொடர்பான அறிமுகம், பெர்சூட் காட்சிகள், இசை நிகழ்ச்சிகள் என்பனவும் இம்முறை கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

இந்தக் கண்காட்சி மூன்று தினங்களும் பிற்பகல் 2.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையில் நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியை மக்கள் இலவசமாக பார்வையிட முடியும் எனவும் விமானப் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

# தினசரி ராசி பலன் (18.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 2ஆம் நாள் புதன்கிழமை ஷஷ்டித்திதி பகல் 2.36 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: உத்தரம் காலை 8.19 வரை பின்னர் அத்தம். அமிர்த சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 12.16 மணி முதல் 1.51 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.32 மணி முதல் 06.02 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை ஸப்தமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அத்தம்.

**'ஜோதிடமணி' பிரம்மஶ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்ப உறவு மேம்படும். தடைப்பட்ட காரியம் கைகூடும். பகையாய் இருந்தவர்கள் உறவாடுவார்கள். வியாபாரம் சிறப்பாக நடக்கும்.

**ரிஷபம்** அனுகூலமான நாள். பொருளாதாரம் தேவைகளை நிறைவு செய்யும். பணிபுரியும் இடத்தில் இருந்த சங்கடம் நீங்கும். சுய தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். அரசாங்க காரியம் அனுகூலமாக இருக்கும்.

**மிதுனம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். தந்தை வழிச் சொத்தில் பிரச்சினை உண்டாகும். தேவையற்ற கடன் சுமை மன வருத்தத்தைத் தரும். ஒரு வேலையை பல தடவைகள் செய்ய வேண்டி வரும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் சுமாரான அமைதி காணப்படும். வரவேண்டிய பணம் தடைப்படும். போட்டிகளையும், ஏமாற்றங்களையும் சந்திக்க வேண்டும்.

**சிம்மம்** நன்மையா நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றமை பலப்படும். இனிமையாகப் பேசி தொழிலை விருத்தி செய்து கொள்வார்கள். எண்ணிய எண்ணம் ஈடேறும்.

**கன்னி** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். தொழில் நுட்பப் பயிற்சிகள் பெற வேண்டி வரும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று மகிழ்வார்கள்.

**துலாம்** யோசனையான நாள். வர வேண்டிய பணம் வரத் தாமதமாகும். குடும்ப உறவில் சிக்கல் உண்டாகும். செயற்பாடுகளில் மந்த நிலை இருக்கும். கொடுக்கல், வாங்கலில் அலைச்சல் இருக்கும்.

**விருச்சிகம்** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இரக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். ஆடை, அணி மணிச் சேர்க்கை உண்டாகும். அந்நியத் தொடர்புகளால் ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். குடும்ப உறவில் சில சங்கடங்கள் உண்டாகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வரவு குறையும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**மகரம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாடுகள் செய்து நன்மை அடைவார்கள். சகோதர உறவு பலப்படும்.

**கும்பம்** குழப்பமான நாள். உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெற முடியாமல் போகும். கடன் பட்டும் தீர்வின்றி தவிப்பார்கள். உறவினர்களுடன் பகை உண்டாகும். குடும்பத்தில் சஞ்சல நிலை காணப்படும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் முன்னேற்றம் அடையும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். சிலருக்கு தொலை தூரப் பயணமும், ஏற்றமான வாழ்வும் அமையும்.

சந்திராஷ்டம நாள்; **அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# முழு அமைச்சரவை அமைக்க ஆளுநருக்கு முதல்வரின் ஆலோசனை உடன் அவசியம்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

மக்களுக்குச் சேவை வழங்கக்கூடிய நிறைவேற்றுத் தீர்மானங்களை எடுக்க இயலாத நிலையில் வடக்கு மாகாண சபை நிர்வாகம் பூரணமாக முடங்கும் நிலையில் உள்ளமையையும், அரசமைப்பு மீறல் ஒன்று இடம்பெறும் என்ற அச்சம் எழுந்துள்ளமையையும் கருத்தில் கொண்டு முழுமையான அமைச்சரவையை உருவாக்கும் ஆலோசனையை ஆளுநருக்கு முதலமைச்சர் வழங்க வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை 19 மாகாண சபை உறுப்பினர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் எடுத்துள்ளனர்.

இந்தத் தீர்மானம் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

பா. டெனிஸ்வரன் தொடர்ந்தும் அமைச்சராக உள்ளார் என மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியதைத் தொடர்ந்து சட்டப்படி வடக்கு மாகாண சபையின் 5 அமைச்சர்களும் யார்? என்ற குழப்பம் எழுந்தது. இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக வடக்கு மாகாணசபை விசேட அமர்வு ஒன்றை நடத்தியிருந்தது. இந்த அமர்விலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை அவைத் தலைவர் உள்ளிட்ட 19 மாகாணசபை உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அந்தத் தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் 2017இல் வழங்கப்பட்ட இடைக்கால கட்டளை மூலம் எழுந்துள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டும் இந்தக் கட்டளை வழங்கப்பட்ட திகதியான 29.07.2018 இல் இருந்து முறைப்படியான அமைச்சர்சபை ஒன்று வடக்கு மாகாணசபைக்கு முழுமையாக பொறுப்புக் கூறக்கூடிய வகையில் இல்லாத நிலையொன்று உருவாகியுள்ளது.

இதனால் உடனடியாக அரசமைப்பு மீறல் ஒன்று உருவாகும் என நியாயமான அச்சம் எழுந்துள்ளமையையும், மக்களுக்கு சேவையாற்றக்கூடிய நிறைவேற்றுத் தீர்மானங்களை எடுக்க முடியாதவாறு வடமாகாணசபை நிர்வாகம் முழுமையாக முடங்கக்கூடிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாலும்–

மாகாணசபையின் பிரதான கடமையான சட்டவாக்கத் தத்துவத்தைப் பிரயோகிக்கும் நியதிச் சட்டங்களை ஆக்க முடியாத தேக்க நிலை ஒன்று உருவாகியுள்ளதாலும் அதன் விளைவாக மாகாணச் செயற்பாடுகளுக்கு மத்தியின் சட்டவாக்கங்களே பிரயோகமாகி அதிகாரப் பகிர்வுக் கோட்பாடே அர்த்தமற்றதாகிப்போய் விடும் சூழ்நிலை உருவாகியுள்ளதாலும்–

முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் அரசமைப்பின் உறுப்புரை 154 (5) இனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவரது தத்துவத்தை முறையாகப் பயன்படுத்தி வடமாகாணசபைக்கு ஒரு முழுமையான அமைச்சர் சபையை உருவாக்குவதற்கான ஆலோசனையை எந்தத் தாமதமும் இல்லாமல் மாகாண ஆளுநருக்கு வழங்கவேண்டும் எனச் சபை தீர்மானிக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. **(இதன் சுருக்கமான செய்தி நேற்றைய காலைக்கதிரில் வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.)**

(ஐ – 7)

# கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கல்வி தகைமைகளை ஆராயவுள்ள கல்வி பொதுச் சேவைகள் ஆணைக்குழு!

கொழும்பு, ஜூலை 18

கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கல்வி தகைமைகள் குறித்த தனிப்பட்ட கோப்பினை கல்வி பொதுச் சேவைகள் ஆணைக்குழு ஆராயவுள்ளது.

கல்வித்துறை சார் அதிகாரிகளின் நியமனத்தில் அரசியல் பழிவாங்கல் இடம்பெறுவதாகவும், இதன்மூலம் தகுதியற்றவற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையின் அடிப்படையிலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இது தொடர்பில் தெரிவிக்கையில் –

அதிபர் ஆசிரியர் நியமனம் உள்ளிட்ட கல்வித்துறைசார் அதிகாரிகள் நியமனத்தில் தற்போது அரசியல் பழிவாங்கலே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கல்வி துறையில் அரசியல் கைக்கூலிகளின் தலையீட்டை நாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை. சிறுவர் துஷ்பிரயோகம் பாலியல் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர்களுக்கே தற்போது நியமனம் வழங்கப்படுகின்றது.

இவர்களில் 27 பேர் சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தியடையாதவர்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறானவர்களின் கல்வி நிலைகள் தொடர்பில் ஆராயுமாறும் கல்வி பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் நாம் கோரியிருந்தோம். அதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1014 பேருக்கு கல்வி நிர்வாக சேவையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இவ்வாறு நியமனம் பெற இருப்பவர்கள் போட்டிப் பரீட்சைகளில் சித்தியடையாதவர்களாகவும், சிலர் பரீட்சைக்கே சமுகமளிக்காதவர்களாகவும் உள்ளனர்.

இவ்வாறான நியமனங்கள் மூலம் எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரே பாதிக்கப்படுவர் என்பது கவலைக்குரிய விடயமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஓய்வூதியம் தொடர்பில் பதிவு செய்வதற்கான கால எல்லை 31 ஆம் திகதியுடன் நிறைவு

கொழும்பு, ஜூலை 18

விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவு முறைமையின் கீழ், மீளப் பதிவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லை எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது என ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஓய்வூதியக் கொடுப்பனவு முறைமையின் கீழ் இதுவரையில் மூன்று லட்சத்து 80 ஆயிரம் பேர் இந்தத் திட்டத்தில் பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை, இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் முடிந்த வரையில் விரைவாக தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஓய்வூதியம் பெறும் அரச சேவையாளர்கள் இதற்காக மீளப்பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரச சேவைகளில் கடமை புரிவோர் மாத்திரமே பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். விதவைகள் உள்ளிட்டோர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு முறைமைகளை முறையாக முன்னெடுக்கும் பொருட்டு இணையத்தளத் தரவு கட்டமைப்பு ஒன்றை அமைப்பதே இதன் நோக்கமாகும்.

இதற்காகவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஓய்வூதியக் கொடுப்பனவு ஆணையாளர் நாயகம் ஜகத் டயஸ் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்னெடுத்துள்ள முயற்சி பெரு வெற்றி



பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

போதைப்பொருள் விநியோக வலைப்பின்னலை முடக்குவதன் மூலம் போதைப்பொருள் வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இப்பாகமுவ மாவட்ட செயலகத்தில் புதிய கேட்போர் கூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார்.

போதைப்பொருள் பிரச்சினை காரணமாக இன்று சிறு பிள்ளையும் வீதியில் நடந்து செல்ல முடியாத நிலை உருவாகி உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கு பிரதர் பதிலளித்து உரையாற்றினார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் போதைப்பொருள் வர்த்தகம் முடக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அன்று போதைப் பொருள் விநியோகஸ்தர்கள் மாத்திரம் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கப்பட்டார்கள்.

பெருமளவில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கு அரசியல் ரீதியாக பாதுகாப்பு அளிக்கப்பட்டது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அமைச்சர் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கடற்றொழிலாளருக்கு புதிய காப்புறுதி திட்டம்



கொழும்பு, ஜூலை 18

மீன்பிடி வள்ளங்களுக்கு புதிய காப்புறுதி முறையொன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது என்று அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா தெரிவித்தார்.

கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளுடன் நேற்று அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலை தொடர்பாக கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது.

எரிபொருள் விலை சூத்திரத்தை நடைமுறைப் படுத்தும் போது கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சு நடத்துவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

கடற்றொழில் துறையில் ஈடுபட்டுள்ள 4500 கடற்றொழிலாளர்களுக்கு புதிய காப்புறுதி முறை அறிமுகப்படுத்துவது குறித்தும் அமைச்சர் கருத்து தெரிவித்தார்.

அனர்த்தங்களின் போது கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# மட்பாண்ட தொழிலை ஊக்குவிக்கும் மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சு



தம்புள்ளை பிரதேசத்தில் மட்பாண்ட தொழில்துறையை ஊக்குவித்து, தயாரிப்புப் பொருள்களின் தரத்தை மேம் படுத்துவதற்கு மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் கலேவெல, இனாமலுவ ஆகிய பகுதிகளில் மட்பாண்டத் தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ள குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளவும் வீடுகளை அமைத்துக் கொள்ளவும் வங்கிக் கடன் வசதிகளைச் செய்துகொடுக்கவும் மாகாண அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

# துறைமுக அதிகார சபை வருமானம் அதிகரிப்பு

இலங்கை துறைமுக அதிகார சபையின் கொள்கலன் முனையம் கப்பல்களுக்கு எரிபொருளை விநியோகித்த தன் மூலம் ஈட்டிய வருமானம் கடந்த வருடத்தில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகித்ததன் மூலம் இந்தக் கொள்கலன் முனையத்தின் எண்ணெய்களஞ்சியம் 7 கோடியே 70 லட்சம் ரூபாவை வருமானமாக ஈட்டியது.

இது அதற்கு முந்திய வருடத்துடன் ஒப்பிடும்போது 113 வளர்ச்சியாகும் என துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

# தொழில் பாதுகாப்புத்துறையை மேம்படுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து!

கொழும்பு, ஜூலை 18

நாட்டின் தொழில் பாதுகாப்புத்துறையை மேம்படுத்துவதற்கும் வலுவூட்டுவதற்குமாக இன்சி சிமெந்து நிறுவனமும், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரவீந்திர சமவீரவும், இன்சி சிமெந்து இலங்கை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நந்தன ஏக்கநாயக்கவும் சமீபத்தில் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், செயற்திறன் மிக்க அபிவிருத்தி ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளன.

இவற்றில் பாதுகாப்பான முறையிலும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்கள் மூலம் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வது இதன் நோக்கமாகும்.

# பஸ் கட்டண அதிகரிப்பு இல்லை!

## அமைச்சர் அசோக அபேசிங்க கூறுகிறார்



எரிபொருள் விலை தொடர்பாக அரசால் தயாரிக்கப்பட்டுள்ள விலை சூத்திரம் மக்களின் கவனத்திற்காக அடுத்த வாரம் வெளியிடப்படும் என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

பெற்றோல் விலைக்கு ஏற்ற வகையில் பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் எந்தவொரு பேச்சுகளும் நடத்தப்படவில்லை. தற்போதைக்கு பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிட்டகோட்டேயில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக அரசால் தயாரிக்கப்பட்ட விலை சூத்திரம் இன்னும் மக்களிடம் பிரசித்தப்படுத்தவில்லை. எவ்வாறாயினும் விலை சூத்திரம் மக்களின் கவனத்திற்காக அடுத்த வாரம் வெளியிடப்படும். அத்துடன் பெற்றோல் விலைக்கு ஏற்ற வகையில் பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் எந்தவொரு பேச்சுகளும் இதுவரை நடத்தப்படவில்லை.

ஏற்கனவே அண்மையில் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையினால் இரண்டு வருடங்களுக்கு பஸ் கட்டண அதிகரிப்பைக் கோர முடியாது. தனியார் பஸ் சங்கத்தினருடனான ஒப்பந்தத்திற்கு அமைய தற்போதைக்கு பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது.

அத்துடன் எரிபொருள் விலை அதிகரிப்பினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு 102 மில்லியன் ரூபா மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நட்டமாக அதனை கருத முடியாது. முன்னைய ஆட்சியின் போது விற்பனை செய்யப்பட்ட பெற்றோலின் விலையை நாம் இன்னும் மிஞ்சவில்லை.

முன்னைய ஆட்சியை பார்க்கிலும் குறைவான விலைக்கே பெற்றோலை விற்கின்றோம். எனினும் உலக சந்தையில் பெற்றோலின் விலை குறையும் போது மக்களுக்கு அந்த சலுகையை வழங்குவோம். நாட்டில் மொத்தமாக 52 லட்சம் குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றமையுடன் 72 லட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் 40 லட்சம் மோட்டார் சைக்கிள்களும் 12 லட்சம் ஓட்டோக்களும் 8 லட்சம் கார்களும் ஒரு லட்சம் பஸ்களும் 4 லட்சம் வான்களும் 3 லட்சத்து 75 ஆயிரம் வரையான லொறிகளும் உள்ளன. எமது அரசின் பெற்றோல் விலை அதிகரிப்பினால் முன்னைய காலங்களை விட வாகன உரிமையாளர்களுக்கு ஓரளவு இலாபம் உள்ளது.

தற்போது இலங்கை போக்குவரத்து சபையை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றியுள்ளோம். இதன்படி முதற்தடவையாக 161 கோடி ரூபா இலாபம் அடைந்துள்ளது. புதிதாக ஊழியர்களை சேவையில் இணைப்பதனை நிறுத்தியதுடன் 4000 பேரை தன்னிச்சையாக ஓய்வு பெறச் செய்தோம்.

இதுவே இந்த இலாபத்திற்கு காரணமாகும். நாம் புதிதாக 500 பஸ்களை இறக்குமதி செய்யவுள்ளோம். 54 ஆசனங்களைக் கொண்ட பஸ்கள் நானூறும் 35 ஆசனங்களைக் கொண்ட பஸ்கள் நூறும் இறக்குமதி செய்யவுள்ளோம். இதற்கு அப்பால் நவீன முறைமையிலான பஸ்களை ஹங்கேரியில் இருந்து இறக்குமதி செய்யவுள்ளோம். இதன்படி ஹய்பிரிட் வகை பஸ்கள் 750, மின்சாரத்தில் இயங்கும் பஸ்கள் 250 ஐ இறக்குமதி செய்யவுள்ளோம். அடுத்த புத்தாண்டுக்கு முன்னர் இந்த பஸ்கள் சேவைக்கு உட்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்

# தூக்குத்தண்டனை கைதிகள் பட்டியலில் முதலிடத்தில் பெண்!



கொழும்பு, ஜூலை 18

போதைப்பொருள் குற்றவாளிகளின் தூக்குத் தண்டனை விவரப்பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ளவர் ஒரு பெண் என நீதிஅமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதைப் பொருள் குற்றவாளிகளின் பெயர் விவரப் பட்டியல் சிறைச்சாலை திணைக்களத்தினால் நீதியமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது அந்தப் பட்டியலில் இருந்து தூக்கிலிடப்படப்போகும் முதல் 18 பேரின் விவரம் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில் அந்தப் பட்டியலில் முதலாவது இடத்தில் இருப்பவர் ஒரு பெண் என்றும் அவர் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் முக்கிய நபரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டுச் சேர்ந்த சக்திமிக்க கூழ் போன்று நாமும் ஒன்றிணைந்த சமூகமாக வாழ்வோம்!

## ‘ஆடிப்பிறப்பு கொண்டாட்டம்’ நிகழ்வில் மன்னார் அரச அதிபர்

மன்னார், ஜுலை 18

கூழ் எவ்வாறு ஒன்றிணைந்து எமக்கு சக்திமிக்க உணவாகவும் ஆரோக்கிய வாழ்வையும் தருவது போன்று நாம் அனைவரும் ஒரே குடும்பத்தவர் என்ற எண்ணப்பாட்டுடன் ஒன்றித்து வாழும் போது எமது வாழ்வில் மகிழ்ச்சி உருவாகும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன்ராஸ் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடனும் வழிகாட்டலிலும் நடத்தப்பட்ட ’ஆடிப் பிறப்பு கொண்டாட்டம்’ நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து மன்னார் இலங்கை போக்குவரத்து பஸ் நிலையத்திலும் ஆடிப்பிறப்பு கொண்டாட்ட கூழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன்ராஸ் தொடர்ந்து உரையாற்றும்போது–

கூழ் என்பதில் அதிக விளக்கம் இருக்கின்றது. கூழ் குறைந்த செலவிலே கூடிய பலனை தருவது. மனதுக்கும் உடலுக்கும் இதம் தருவது. அத்துடன் கூட்டுச் சேர்ந்த உணவாக காணப்படுகிறது.

நாம் இப்பொழுது அந்த ஆணி இந்த ஆணி (பிரியாணி) எனச் சாப்பிட்டு எமது உடலில் ஆணிகள்; ஏறி நோய்களுக்கு உள்ளாகி வருகின்றோம்.

அத்துடன் எமது வாழ்விலும் முன்பு இருந்த கூட்டுக் குடும்பம் என்பது எம் மத்தியில் இப்போது இல்லை. நாம் சிறு சிறு குடும்பங்களாக மாறி பிரிந்து எமது ஒற்றுமையைச் சிதைத்து வாழ்கின்றோம்.

இந்த கூழ் நமக்கு தரும் பாடம் நாம் அனைவரும் கூட்டாக வாழ வேண்டும்.



அப்பொழுதுதான் எமது வாழ்வில் ஒரு இதமான வாழ்வை உணர்வோம் என்பதாகும்.

நாம் புத்தகங்கள் வாசிப்பதற்கு மேலாக இவ்வாறான கலாசார நிகழ்வுகளில் ஓர் கூட்டாக இணைவோமாகில் அங்கே நாம் எமது மனதில் இதமான ஒருவித மகிழ்வைக் காண்போம்.

நாம் இன்று இந்த கூழை தங்கத் தட்டிலோ அல்லது வெள்ளித் தட்டிலோ அல்லது பிளாஸ்ரிக் தட்டிலோ குடிக்கப் போவதில்லை. மாறாக நாம் சிரட்டையிலே இந்தக் கூழை அருந்தப் போகின்றோம்.

சிரட்டையில் நாம் அருந்தினால் யாழ் பகுதியில் பலவிதமான கருத்துக்களை தெரிவிப்பர். ஆனால் இன்று நாங்கள் அனைவரும் ஒரே குடும்பம் ஒரே சமூகம் என்ற நிலையில் மட்டுமல்ல உடலுக்கு தீங்கு இல்லாத பாத்திரமாகவும் அது இருக்கின்றது.

நாம் எல்லோரும் ஒரே சமூகம் என்ற நிலையில் இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொண்டு உணர்ந்து செயல்படுகின்றபோது எமக்குள் குரோதம், பகை, பொறாமை என்ற தீய எண்ணங்கள் எம்மை ஆட்கொள்ளாது.– என்றார்.

(இ–112)

## படையினரின் சுழியோடிகள் பயிற்சி நிறைவு நிகழ்வில் இராணுவத் தளபதி







முல்லைத்தீவு நாயாறு பிரதேசத்திலுள்ள இராணுவ கம்பட் சுழியோடிகள் பயிற்சி பாடசாலையில் 38 இராணுவ கம்பட் சுழியோடிகள் பயிற்சியை நிறைவு செய்த படையினர்களது பயிற்சி நிறைவு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வுக்காக விமானம் மூலம் பயணம் மேற்கொண்ட இலங்கை இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க அவர்கள் கேப்பாபிலவு விமான நிலையத்தில் இறங்கி முல்லைத்தீவு படைதலைமையகத்திற்கு பயணம் மேற்கொண்டு பின்னர் நாயாற்று பகுதியில் உள்ள சிறப்பு பயிற்சி முகாமுக்குச் சென்று நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளார்

90 நாள்களைக் கொண்ட இந்தப் பயிற்சியில் படையினருக்கு சுழியோடும் தொழில் நுட்பங்கள் மற்றும் நீரினுள் சாகசங்களை புரிவது தொடர்பான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க இந்தப் பயிற்சி நிறைவு விழாவிற்கு பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்துள்ளதுடன் இதில் முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுரு மற்றும் இந்த பயிற்சி நிலையத்தின் கட்டளை தளபதியான மேஜர் லங்கா அத்து கோரளவால் இராணுவத் தளபதி வரவேற்கப்பட்டு இராணுவசம்பிரதாய முறைப்படி அணிவகுப்பு மரியாதைகள் வழங்கப்பட்டன.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல்மகேஷ்சேனாநாயகபயிற்சியின் போது திறம்பட செயற்பட்ட இராணுவத்தினருக்கு வெற்றிப் பதக்கங்களை வழங்கி கௌரவித்து படையினர்கள் மத்தியில் உரையாற்றினார்.









மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டக் கூழ் அருந்தும் நிகழ்வு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடந்தது. நிகழ்வில் அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன்ராஸ் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள் ஊழியர்கள் கலந்து கொண்டிருந்தமையையும் மன்னார் பஸ் நிலையத்தில் கூழ் வழங்குவதையும் காணலாம்.

**(படப்பிடிப்பு: மன்னார் நிருபர் வாஸ் கூஞ்ஞ)**

# 500 நாள்களைக் கடந்த நிலையில் போராட்டக் களத்தில் துயருடன் காணாமற் போனோரின் உறவுகள்

■ கிருஷ்ணா-

யுத்தம் முடிவடைந்து 9 ஆண்டுகள் கடந்த பின்னரும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு கிடைக்காத நிலையே தொடர்கிறது. யுத்தம் நடை பெற்ற காலப் பகுதியிலும், யுத்தத்தின் இறுதிக் காலப் பகுதியிலும் பலர் காணாமல் போகச் செய்யப்பட்டார்கள். இராணுவ சுற்றுவளைப்புக்களின் போதும், பொலிஸ் மற்றும் புலனாய்வுத்துறையின் செயற்பாடுகளின் போதும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன், இறுதி யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இராணுவத்தினரதும், அரசாங்கத்தினதும் கோரிக்கைக்கு அமைவாக விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பலர் சரணடைந்திருந்தார்கள். இன்னும் சிலர், பலர் முன்னிலையில் அவர்களது குடும்ப உறுப்பினர்களால் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டனர். முன்னைய மஹிந்த அரசாங்கம் சரணடைந்த மற்றும் கையளிக்கப்பட்ட 12 ஆயிரம் வரையிலான விடுதலைப் புலி உறுப்பினர் களை புனர்வாழ்வளித்து விடுதலை செய்த அதேவேளை, சரணடைந்த மற்றும் கையளிக்கப்பட்ட இன்னும் சிலர் காணாமல் போயிருந்தனர்.

இராணுவ புனர்வாழ்வு நிலையங்களில் இருக்கிறார் என ஆதாரங்கள் வெளியாகி இருந்த சிலரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது பிள்ளைகள் எப்போது வருவார்கள்..?, தமது கணவன்மார் எப்போது வருவார்கள்...?, தன்னுடைய அப்பா எப்போது வருவார்..?, தன்னுடைய சகோ ரர்கள் எப்போது வருவார்கள்...? என போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த மஹிந்த அரசாங்கத்தின் காலத்தில் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும், வெள்ளை வான்களுக்கு மத்தியிலும் மக்கள் வீதிகளில் நீதி கேட்டு ஜனநாயக ரீதியாக போராடியிருந்தார்கள். இத்தகைய மக்களது போராட்டங்கள் சர்வதேச கவனத்தையும் ஈர்த்திருந்தன. இதன்காரணமாக மஹிந்த அரசாங்கம் அழுத்தங்களையும் எதிர்கொண்டது. சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருந்தது. இதனால் மைத்திரி – ரணில் கூட்டரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் பதவிகளையும், அரச சலுகைகளையும் பெற்றுக் கொண்டது.

அரசாங்கத்துடனான அத்தகைய தொடர்புகளையும், பதவிகளையும் கொண்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது பிரச்சினையை தீர்க்க கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமை தவறியிருக்கின்றது. அரசியல் தீர்வு என்பது ஒரு நீண்ட விடயம். ஆனால் மீள்குடியேற்றம், வாழ்வாதாரப் பிரச்சினை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, காணி விடுவிப்பு என கண்முன்னே உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய பல அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்குக் கூட மைத்திரி – ரணில் அரசாங்கத்திற்கு போதிய அழுத்தம் கொடுத்ததாக தெரியவில்லை. மாறாக அரசாங்கத்தை சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுவிக்க கூட்டமைப்பு தலைமை உத வியுள்ளதுடன், பாதிக்கப்பட்ட மக்களது தரப்பாக சர்வதேச இராஜதந்திர நகர்வுகளிலும் தோல்வி கண்டுள்ளது.

நல்லாட்சி என மக்கள் நம்பிய இந்த அரசாங்கமும், அதற்கு முண்டு கொடுக்கும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது பிரதிநிதிகளும் மக்களது பிரச்சினைகள் குறித்து போதிய அழுத்தம் கொடுக்காமையால் மக்கள் தாமாகவே வீதிகளில் இறங்கி ஜனநாயக ரீதியாக போராடத்தொடங்கினார்கள். காணிவிடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி என மக்களது போராட்டங்கள் தன்னெழுச்சியாக எந்த வித அரசியல் தலையீடும் இன்றி நடைபெற்று வருகின்றன.




மக்களது தன்னெழுச்சியான போராட்டம் காரணமாக கேப்பாபிலவு – புலக்குடியிருப்பு, இரணைதீவு, வலிவடக்கு ஆகிய பகுதிகளில் குறிப்பிட்ட அளவு நிலங்கள் விடுவிக்கப்பட்டன. மக்களது போராட்டத்தின் விளைவாக அவை விடுவிக்கப்பட்டதன் பின்னர் அங்கு சென்று தம்மால் தான் இக்காணிகள் விடுவிக்கப்பட்டன என காட்டுவதற்கே தமிழ் தலைமைகளால் முடிந்திருந்தது. ஆனாலும் மக்கள் உண்மை நிலையை அறிவர். தமது தலைமைகளின் வங்குரோத்து அரசியல் நிலை குறித்தும் மக்கள் விழிப்படைந்து வருகிறார்கள்.



## தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைந்தால் தான் தாய்மார்களுக்கு விடிவு

இந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மருதங்கேணி என 500 நாள்களைக் கடந்தும் இன்றும் தீர்வு இன்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதேபோல், கேப்பாபிலவு மக்களின் நிலமீட்புப் போராட்டமும் 500 நாள்களைக் கடந்துள்ளது. வீதியோரத்தில் தற்காலிக கொட்டகை அமைத்து போராட்டத்தை ஆரம்பித்த மக்கள் இரவு, பகல், மழை, வெயில் என பாராது கடந்த 500 நாள்களுக்கு மேலாக அந்த கொட்டகைகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வாகன இரைச்சல்கள், வீட்டில் உள்ள ஏனைய உறவுகளையும் பிரிந்து போராட்ட களத்தில் இருக்கின்றமை, நீதி கிடைக்குமா என்ற ஏக்கம், அரசியல்வாதிகளின் போலி வாக்குறுதிகள், காலநிலைத் தாக்கம், சூழல் பாதிப்புக்கள், தொடர் விசாரணைகள், மனஅழுத்தம் என்பவற்றால் நாளாந்தம் போராட்டக் களத்தில் உள்ள அந்த தாய்மார் உடல், உள ரீதியாக பாதிப்படைந்து மிகவும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இப்போராட்டக் களத்தில் உள்ள தாய்மாரில் அதிகமானவர்கள் வயது முதிர்ந்தவர்கள். அவர்களது உடல் தொடர் போராட்டத்தால் இன்னும் மோசமடைந்து வருகின்றது. இன்னும் சில தாய்மார் போராட்டக் களத்திலேயே மடிந்தும் உள்ளனர். இந்த நிலையில் சர்வதேச அழுத்தம் காரணமாக கொண்டுவரப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகமும் போராட்டக் களத்தில் உள்ள தாய்மாருக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. அந்த அலுவலகம் சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்கான ஒரு நகர்வே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தையோ அல்லது தீர்வையோ வழங்கக் கூடிய வகையில் அமையவில்லை என்பது அந்த மக்களின் குரலாக உள்ளது.

இந்த நிலையில் அந்த மக்களுக்கு ஆறுதலாகவும், உறுதுணையாகவும் இருந்து அவர்களது கோரிக்கையை வலுப்படுத்தி தீர்வைப் பெற அழுத்தம் கொடுக்க வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அதனைகண்டுகொள்ளாமல் இருக்கின்றது. இதன் காரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீதும் மக்கள் அதிருப்தியடைந்து அவர்களும் அந்த மக்களிடம் இருந்தும், அவர்களது மனங்களில் இருந்தும் காணாமல் போகிறார்கள்.

### ஜெனீவா வரை சென்று முறையிட்ட தாய்மார்

இந்தநிலையில், உள்நாட்டில் நம்பிக் கையிழந்த பாதிக்கப்பட்ட அந்த தாய்மார் தமது நியாயமான கோரிக்கை தொடர்பிலும், நீதியான போராட்டம் தொடர்பிலும் நேரடியாக ஜெனீவா வரை சென்றும் முறையிட்டுள்ளனர். அங்கு நடைபெற்ற பல அமர்வுகளிலும், இராஜதந்திரிகள், மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள், ஐ.நா பிரதிநிதிகள் எனப் பலரிடமும் நேரடியாக தமது நிலை தொடர்பில் அவர்கள் தெளிவுபடுத்தியும் உள்ளார்கள்.

காணாமல் ஆக்கப்பட் டோருக்கு நீதி கோரிய போராட்டங்கள் 500 நாள்களைக் கடந்துள்ள நிலையில் அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பிரித்தானியா உள்ளிட்ட புலம்பெயர் தேசங்களிலும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க பிரித்தானியா போன்ற நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறனதொரு நிலையில், அந்த தாய்மாரின் நிலைமையை புரிந்து மனச் சாட்சியுடனும், இதய சுத்திடனும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை சர்வதேச சமூகம் அணுக வேண்டும். அவர்களால் வழங்கக் கூடிய அழுத்தங்களின் மூலம் அந்த மக்களுக்கான ஒரு நீதியை பெற முடியும் என்ற நிலையே தற்போது உருவாகியுள்ளது. இதனைப் புரிந்து தமிழ் தலைமைகள், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மற்றும் புலம்பெயர் தேசங்களில் வாழும் ஈழத் தமிழர்கள் என அனைத்து தரப்புக்களும் இணைந்து பாதிக்கப்பட்ட அந்த தாய்மாருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க ஒன்று பட முன் வரவேண்டும். இதன் மூலமே சர்வதேசத்தின் மனக் கண்களை திறந்து இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய ஒரு நிலையை உருவாக்க முடியும். அந்த அழுத்தம் மூலமே போராட்டக் களத்தில் உள்ள தாய்மாரை ஓரளவேனும் ஆற்றுப்படுத்த முடியும். ★






# கல்விக் கதிர் வெளியீடு 06

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

## பகுதி - II

**புலமைபரிசில் கடந்த காலவினாகளின் தொகுப்பு வினாத்தாள் 02**

01. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

இடர் வரும் போதும் – உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் – மாந்தர்
உறவுகொள்வர் அப்பா
ஓடும் உதிரத்தில் – வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் –சாதி
தெரிவதுண்டோ அப்பா
நன்மை செய்பவரே உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மைசெய்பவரே – அண்டித்
தீண்டஒண்ணாதார்

கவிஞர் கவிமணிதேசிகவிநாயகம் பிள்ளை

1. உடன் பிறந்தவர் என்பதன் பொருள் யாது?
..............................................................................................

2. ஒத்த சொல்லை பாடலில் இருந்து எழுதுக.
   1. மக்கள் – ................................ 2. இரத்தம் – ..........................
   3. தந்தை – ............................. 4. மனம் – .............................

3. இப்பாடலைப் பாடியவர் யார்?
..............................................................................................

4. உவமைத் தொடரை எழுதுக?
..............................................................................................

5. மேற்குலத்தவர் எனப்படுபவர் யார்?
..............................................................................................

6. பெயரெச்சம் ஒன்று தருக?
..............................................................................................

7. விசிறியும் சுழியும் உள்ள சொல்லை எழுதுக?
..............................................................................................

8. இப்பாடலில் உள்ள எதிர்ச்சொல் சோடி ஒன்று எழுதுக?
..............................................................................................

2 தொடக்கம் 6 வரையான வினாக்களில் தரப்பட்ட தொடர்புக்குரிய தனிச் சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

02.மெய்ம்மையைக் கடைப்பிடித்து அறநெறியில் எதிர்ப்பைத் தெரிவிக்கும் அமைதியான முறை.
(சத்தியசோதனை / சத்தியாக்கிரகம்)

03.எவ்வுயிர்க்கும் தீங்குசெய்யாமை.
(அஹிம்சை / ஹிம்சை)

04.ஒரேபாடசாலையில் ஒன்றாகக் கற்பவர்கள்.
(சகபாடிகள் / நண்பர்கள்)

05.நடுவுநிலையின்மை.
(பராமுகம் / பாரபட்சம்)

06.அரசராகப் பொறுப்பேற்பதையொட்டிகொண்டாடப்படும் விழா.
(முடிசூட்டுவிழா / கண்விழா)

07. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1.காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் ...........................................................

2. ஆழமறியாமல் காலைவிடாதே ...........................................................

08. பின்வரும் சொற்களை ஆங்கிலத்திற்கு மாற்றி எழுதுக.
1. நாம் இலங்கையர் ...........................................................
2. காற்று ...........................................................

09. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
1. மின்னுவதெல்லாம் பொன்னல்ல ...........................................................
2. கடுகுசிறிதானாலும் காரம் பெரிது ...........................................................

10.பன்மை வாக்கியங்களாக எழுதுக.
1. நான் ஓடினேன் .........................................
2. மரம் அசைந்தது .........................................




## நிறம் தீட்டுங்கள்





## முல்லாவின் தந்திரம்

ஒரு நாள் முல்லா குளத்தில் நீந்திக் கொண்டிருந்த வாத்துக்களில் ஒன்றைப் பிடிக்க முயற்சி செய்தார்.

வாத்துக்கள் கரை ஓரமாக வரும் போது முல்லா அதனை எட்டிப் பிடிக்க முயற்சி செய்தார். வாத்துக்களோ அவர் கையில் அகப்படுவதுபோல பாவனை செய்து நழுவிக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் முல்லாவின் நண்பர் ஒருவர் அந்தப் பக்கமாக வந்தார்.

வாத்தைப் பிடிக்க முல்லா எடுக்கும் பிரயாசையையும், அதில் அவர் அடிக்கடி தோல்வியடைகின்றமையை கண்ட நண்பருக்குச் சிரிப்பு வந்தது.


என்ன முல்லா அவர்களே வாத்து வேட்டை நடக்கிறது போலிருக்கிறது என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

முல்லா உடனே தமது பையிலிருந்த ரொட்டித் துண்டை எடுத்து குளத்து நீரில் நனைத்துச் சாப்பிடத் தொடங்கினார்.

என்ன செய்கிறீர்கள் முல்லா அவர்களே என நண்பர் கேட்டார்.

வாத்து சூப்பில் ரொட்டியை நனைத்துச் சாப்பிடுகிறேன் என்று தனது ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு கூறிச் சமாளித்தார் முல்லா.

## வழியைக் காட்டுங்கள்!



# பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கு பூட்டு




கண்டி, ஜூலை 18

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் மறு அறிவித்தல் வரும் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.


அதன்படி நேற்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு முன்னதாக அந்த பீட மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்திருந்தது.

80 வீத வரவு உள்ள மாணவர்களுக்கே பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படும் நிலையில், அவ்வாறு கணிப்பீடு செய்யாமல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்குமாறு சில மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பீடத்துக்குரிய மொத்த மாணவர்களில் 97 வீதமான மாணவர்களுக்கு சரியான வரவு வீதம் இருப்பதாகவும், எஞ்சிய 03 வீதமான மாணவர்களுக்கே வரவு வீதம் குறைவாக இருப்பதாகவும், அந்த 03 வீதமான மாணவர்களே எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் உபுல் பீ. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு சகல சமூகத்தவரும் ஒன்றிணைவோம்!

## குணவங்ச தேரர் விடுக்கும் அழைப்பு



கொழும்பு, ஜூலை 18

அரசால் திட்டமிட்டுள்ள புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால், ஆணி வேரில்லாத நிலையில் இந்த நாடு 9 துண்டுகளாக உடைந்து விடும் என தேசத்தைப் பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் குறிப்பிட்டார்.

எதிர்கால சந்ததியினரை கௌரவமாக ஒரே நாட்டில் வாழ வைப்பது தான் எமது எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பை புதிய அரசியல் அமைப்பினூடாக இந்த அரசாங்கம் உடைக்கப் பார்க்கின்றது.

இதற்காக தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சகல சமூகத்தவர்களும் ஒன்றிணைந்து நாட்டில் தலைமை மாற்றமொன்றை முன்னெடுப்போம் எனவும் தேரர் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் தேரர் இதனைக் கூறினார்.

# இளைஞர் திறன்களை மேம்படுத்த மாங்குளத்தில் வியாபார நிலையம்!



கொழும்பு, ஜூலை 18

தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கம் (நிஸ்கோ) மாங்குளத்தில் வியாபார நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தி இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இளைஞர்களுக்கான சுய தொழில் வாய்ப்பு, சுயதொழில் கடன்கள் மற்றும் சுயதொழில் பயிற்சி ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவது இதன் இலக்காகும்.

இதன் முதற்கட்டமாக வியாபார நிலையத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி. சறோஜா குகநேசதாசன் இதற்கு தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# பிரதேச சபை தலைவருக்கு 3 மாதம் சிறைத்தண்டனை!

கொழும்பு, ஜூலை 18

பொலிஸ் உத்தியோகத்தருக்கு இடையூறு விளைவித்த எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை தலைவருக்கு 3 மாதம் சிறைத் தண்டனை எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு இடையூறு விளைவித்ததன் பேரில் எம்பிலிப் பிட்டிய பிரதேச சபை தலைவரான எம்.கே.அமில என்பர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் எம்பி லிப்பிட்டிய பிரதேச சபை தலைவருக்கு 3 மாதம் சிறை தண்டனையும் 30 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# காணி விடுவிப்புக் குறித்து....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதி. அதை நாம் எதிர்பார்ப்பது தான். தருணம் வரும் வரையில்தான் இவ்வாறான கருத்துக்கள் தங்கி வாழ முடியும். தரு ணம் வந்ததும் விட்டு ஏக வேண்டியிருக்கும். உதாரணத்திற்கு IPKF வாபஸ் பெற வேண்டியிருந்தது கௌரவ ஏ. சிங் டெல்கியில் பிரதமர் ஆகியதால்! இங்கிருந்து நாம் எப்பொழுதும் திரும்ப மாட்டோம் என்ற கூற்றுடன் தான் IPKF படையினர் வந்தார்கள். ஆகவே தருணங்கள் எப்போது வருவன என்று எம்மால் கூறமுடியாது. மக்களுக்குப் பாதிப்பு ஏற் படுத்தும் எதனையும் நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

6.விஜயகலா சம்பந்தமாக பொலிஸ் வந்து உங்களைச் சந்தித்தார்களா?

**பதில்** - ஆம். திட்டமிட்ட குற்றங் கள் தடுப்புப்பிரிவு வந்தார்கள். விஜ யகலா பேசிய கூட்டத்தில் நானும் பங்கேற்றபடியால் என்னிடம் சில கேள்விகள் கேட்டார் கள். அமைச் சர்கள் வஜிர அபேவர்த்தன, திலக் மாரப்பன போன்றவர்களிடம் வாக்குமூலம் பெற்றதாகக் கூறினார்கள். விஜயகலாவின் பேச்சில் இடம் பெற்ற சில கேள்விக் கிடமான பகுதிகளைப் பற்றி எனது கருத்தைக் கேட்டார்கள் அந்த நாளும் வந்திடாதோ என்று ஒருவர் அங்கலாய்ப் பது குற்றமாகாது என்று கூறினேன். புலிகள் திரும்பவும் வர வேண்டும் என்று நாங் கள் பாடுபடுகின்றோம் என்று அவர் கூறியது இந்தப் பாது காப்புச் சூழலையே அன்றி வன்முறைகளை மீண்டும் தொடக்கும் நோக் குடன் அவர் கூறவில்லை என்று கூறித் தனது கட்சிக்கு விசுவாசமா கவே இதுகாறும் அவர் நடந்து வந்துள்ளார் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றேன்.

அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் அது எமது பேச்சுச் சுதந்திரத்தைப் பாதிப்பதாகும்.

## குடாநாட்டில் விபத்துக்கள் அதிகரிப்பு:

## 6 மாத காலத்தில் 42 மரணம்; 2454 பேர் காயம்!

# ‘கவனமாக சென்று வாருங்கள்’ விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஆளுநர் ஆலோசனையில்!











யாழ் குடாநாட்டில் அண்மைக்காலமாக விபத்துக்கள் அதிகரித்துள்ளன. கடந்த 6 மாத காலப்பகுதியில் யாழ் போதனா வைத்தியசாலையில் மட்டும் 42 பேர் விபத்தினால் மரணமடைந்தும் 2454 பேர் வீதி விபத்தினால் காயமடைந்தும் உள்ளனர்.

மக்கள் மத்தியில் வீதி ஒழுங்கு தொடர்பில் விழிப்புணர்வு இல்லாமையே இதற்குக் காரணம் என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை சரி செய்யும் வகையில் வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயின் ஆலோசனையின் பேரில் வட மாகாண ஆளுநர் செயலகம் முதலமைச்சர் அமைச்சு, பொலிஸ் தலைமையகம் ரூபவாஹிக் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து கவனமாக சென்று வாருங்கள் நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்து வைத்துள்ளன.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் 1500க்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் வாகனச்சாரதிகள் கலந்து கொண்டனர். கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த வீதி போக்குவரத்து பொலிஸாரின் செயல்முறை காட்சி நாடகங்களும் வீதியில் அரங்கேற்றப்பட்டன.

வீதிகளில் பயணிக்கும் வாகனங்களுக்கான விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களை வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே ஒட்டி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதேவேளை, விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:-

விபத்துக்களை தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக!

இலங்கை மின்சார சபை, உள்ளூராட்சி சபைகள் இணைந்து முதற்கட்டமாக யாழ் நகரப்பகுதியில் விபத்துகள் அதிகளவில் நடைபெறும் சந்திகளாக இனங்காணப் பட்ட 15 சந்திகளுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்தவுள்ளனர்.

வீதி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியன இணைந்து அதிகளவில் விபத்து நடைபெற்ற வீதிகளாக இனங்காணப்பட்ட 21 சந்திகளில் வீதி வேக தடைகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களில் இரவிலும் ஒளிரத்தக்க விசேட நிற விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களை விநியோகிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ் மாநகரசபையின் அனுசரணையுடன் 25 விழிப்புணர்வு பதாகைகள்; பாடசாலையை அண்டிய முக்கிய சந்திகளில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

லயன்ஸ் கழகத்தினரால் வீதி விபத்து விழிப்புணர்வினை ஏற்படுத்தக் கூடிய வாசகங்கள் அடங்கிய பொம்மைகள் 200 வீதிகளில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

# மாலியில் பயங்கரவாதிகள் வெறியாட்டம்; துப்பாக்கிச் சூட்டில் அப்பாவிகள் 14 பேர் பலி



பமாகோ, ஜுலை 18

மாலி நாட்டின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் கவுமாகா கிராமத்தில் அல் – கொய்தா தொடர்புடைய பயங்கரவாதிகள் பலர் உள்ளனர். கடந்த 2015 ஆம் ஆண்டில் இருந்து பாதுகாப்பு படைகள் மற்றும் ஐ.நா. அமைதி காப்பு இயக்கம் ஆகியவற்றின் மீது பயங்கரவாத அமைப்பினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குள்ள கிராமத்தில் நுழைந்த பயங்கரவாதிகள் அந்தப் பகுதியில் எதிர்ப்பட்டவர்கள் பலரை கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளினர்.

இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 14 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். மேலும், அங்கிருந்த ஒரு லொறி மற்றும் மூன்று வாகனங்கள் எரிந்து சேதமடைந்தன. தகவலறிந்து அங்கு சென்ற பொலிஸார் மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலுக்கு இது வரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் பிரசாரத்தில் ஈடுபட்ட அரசியல் தலைவர் மீது முட்டை வீச்சு

கராச்சி, ஜுலை 18

பாகிஸ்தானில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட முட்டாஹிடா குவாமி இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தலைவர் மீது முட்டை வீசிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் நாடாளுமன்றம் மற்றும் சில மாகாண சட்டசபைகளுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. அங்குள்ள அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், பாகிஸ்தானில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட முட்டாஹிடா குவாமி இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தலைவர் மீது முட்டை வீசிய சம்பவம் நடந்துள்ளது.



பாகிஸ்தானின் கராச்சி நகரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முட்டாஹிடா குவாமி இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தலைவர் பரூக் சத்தார் நேற்று முன்தினம் கலந்து கொண்டார்.

பிரசாரத்தில் சத்தார் பேச ஆரம்பித்த போது அங்கு வந்த சில பெண்கள் அவரது பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அவர் உடனே அங்கிருந்து திரும்பிச் செல்ல வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். அப்போது பரூக் சத்தார் மீது சிலர் முட்டைகளையும் வீசினர்.

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட அரசியல் கட்சியின் மூத்த தலைவர் மீது முட்டை வீசப்பட்ட சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

## பிரான்ஸ் வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு!






பாரீஸ், ஜுலை 18

உலகக் கிண்ண உதைபந்து தொடரில் சம்பியன் பட்டம் வென்று நாடு திரும்பிய பிரான்ஸ் அணி வீரர்களுக்கு அந்த நாட்டு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் – குரோஷியா அணிகள் மோதின. இதில் பிரான்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் குரோஷியா அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

உலகக் கிண்ணத்தை வென்ற பிரான்ஸ் அணிக்கு உலகத் தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்தனர். பிரான்ஸ் அணியின் வெற்றியை அந்த நாட்டு ரசிகர்கள் பல்வேறு இடங்களில் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அதைத் தொடர்ந்து, பிரான்ஸ் திரும்பிய அந்த நாட்டு வீரர்களுக்கு தலைநகர் பாரிஸில் லட்சக்கணக்கான ரசிகர்கள் திரண்டு வரவேற்றனர்.

## 'எனக்கு பாதி சம்பளம் போதும்!'

# மெக்சிகோ ஜனாதிபதியாக பதவி ஏற்கின்றார் லோபஸ்

மெக்சிகோவில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற இடதுசாரி வேட்பாளர் லோபஸ் ஆப்ரதோர் விரைவில் பதவியேற்க உள்ள நிலையில் பல்வேறு சிக்கன அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

வட அமெரிக்க நாடான மெக்சிகோவில் ஜனாதிபதி பதவி, நாடாளுமன்றம் மற்றும் 3 ஆயிரம் பிராந்திய பதவிகளுக்கு சமீபத்தில் தேர்தல் நடந்தது. தற்போதைய ஜனாதிபதியாக உள்ள பெனா நெய்டோ சார்ந்துள்ள ஐ.ஆர்.பி. கட்சி படுதோல்வியடைந்தது.

ஐ.ஆர்.பி. கட்சியில் இருந்து பிரிந்து இடதுசாரி சித்தாந்தங்கள் கொண்ட தேசிய ரீஜெனரேசன் இயக்கம் தொடங்கிய லோபஸ் ஆப்ரதோர் 53 சதவிகித வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

கடந்த ஒரு நூற்றாண்டாக மெக்சிகோவை ஆண்டுள்ள இரு கட்சிகளை தோற்கடித்தவர் என்ற வரலாற்று சாதனையை லோபஸ் ஆப்ரதோர் படைத்துள்ளார்.

விரைவில் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள நிலையில், இப்போதே பல சிக்கன நடவடிக்கை அறிவிப்புகளை அவர் வெளியிட்டுள்ளார்.

இந்திய ரூபா மதிப்பில் மெக்சிகோ ஜனாதிபதிக்கு மாதம் ரூ.10 லட்சம் ஊதியம் வழங்கப்பட்டு வரும் நிலையில், தான் ஜனாதிபதியாக பதவியேற்றதும் ஜனாதிபதிக்கான ஊதியம் ரூ.4 லட்சமாக குறைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

ஊழல், வறுமை, போதை மாபியா ஆகியவற்றை ஒழிப்பதே தனது முதல் இலக்கு என லோபஸ் ஆப்ரதோர் தனது தேர்தல் வாக்குறுதிகளை அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் முட்டாள்தனமே ரஷ்யாவுடன் உறவு சீர்குலைந்ததற்கு முக்கிய காரணம்: ட்ரம்ப்



ஹெல்சின்கி, ஜுலை 18

அமெரிக்காவில் இதற்கு முன் ஆட்சியில் இருந்தவர்களின் முட்டாள்தனமே ரஷ்யா உடனான உறவு சீர்குலைந்ததற்கு காரணம் என ட்ரம்ப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் – ரஷ்ய ஜனாதிபதி புடின் சந்திப்பு பின்லாந்து நாட்டின் ஹெல்சின்கி நகரில் நடந்துள்ளது. பல்வேறு விவகாரங்களில் இரு நாடுகளுக்கும் பனிப்போர் நிலவி வரும் நிலையில், இந்தச் சந்திப்பு மிக முக்கியமான ஒன்றாக உலகம் முழுவதும் கருதப்படுகிறது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்ய உளவுத்துறையின் தலையீடு தொடர்பாக ராபர்ட் முல்லர் குழு விசாரணை நடத்தி வருவது இரு நாடுகளுக்கும் இடையே மோசமான உறவு உருவானதற்கு முக்கிய காரணம் என்பதை குறிப்பிடும் விதமாக ட்ரம்ப் ட்வீட் செய்துள்ளார்.

'ரஷ்யாவுடனான நமது உறவு மிகவும் மோசமான சூழலுக்கு சென்றதற்கு பல ஆண்டுகால அமெரிக்காவின் முட்டாள்தனத்திற்கு நன்றி. தற்போதைய தேடலுக்கும் (ராபர்ட் முல்லர் குழுவின் விசாரணை) நன்றி' என அவர் ட்வீட் செய்துள்ளார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் ட்ரம்பின் ட்விட்டை லைக் செய்ததோடு, ரீ – ட்வீட் செய்துள்ளது. எனினும், சொந்த நாட்டின் மீது ட்ரம்ப் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளதற்கு பலர் எதிர்ப்புக் கருத்தும் பதிவிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்ப் – புடின் பேச்சு வெற்றி: பனிப்போர் முடிவுக்கு வருகிறது

ஹெல்சின்கி, ஜுலை 18

அமெரிக்கா – ரஷ்யா இடையே நேற்றுமுன்தினம் நடந்த உயர்மட்ட நேரடி பேச்சு வெற்றிகரமாகவும், பயனுள்ள வகையிலும் இருந்தது என்று ட்ரம்ப் மற்றும் புடின் கூட்டாக செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா – ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகள் நேரடியாக இதுவரை மோதிக்கொள்ளவில்லை என்றாலும் பல்வேறு விவகாரங்களில் இரண்டு நாடுகளும் மறைமுக யுத்தம் நடத்தி வருகின்றன. சிரியா, உக்ரைன் விவகாரங்கள் அதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.



இந்தநிலையில், பின்லாந்து தலைநகர் ஹெல்சின்கியில் நேற்றுமுன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் – ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகிய இருவரும் சந்தித்து பேசினர். விரிவாக நடந்த இந்த பேச்சில் பல முக்கிய விவகாரங்கள் விவாதிக்கப்பட்டன.

அமெரிக்க தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு, சிரியா உள்ளிட்ட விவகாரங்களும் இடம் பிடித்தன.

இரு கட்டமாக நடந்த பேச்சுக்கு பின்னர் ட்ரம்ப் – புடின் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, புடின் பேசுகையில் –

பனிப்போர் நிலவிய காலத்துக்கு பின் நடந்துள்ள இந்த சந்திப்பு வெற்றிகரமாக நடந்துள்ளதாக இருவரும் கருதுகிறோம். இரண்டு மிகப்பெரிய அணு ஆயுத நாடுகளான அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் சர்வதேச பாதுகாப்பை கவனிப்பது பொறுப்பாக உள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு எந்த விதத்திலும் இல்லை என புடின் கூறினார்.

ட்ரம்ப் பேசுகையில் –

நடந்து முடிந்துள்ள இந்த சந்திப்பு வெளிப்படையாகவும், ஆழமானதாகவும், நேரடியான தாகவும் இருந்தது. இந்த நான்கு மணி நேர சந்திப்பு கடந்த கால கசப்புகளை போக்கும் என முழுமையாக நம்புகிறேன் எனக் கூறினார்.

மோடி கூட்டத்தில் கூடாரம் சரிந்தது:

# மேற்கு வங்காள மாநில அரசிடம் அறிக்கை கோரும் மத்திய அரசு



கொல்கத்தா, ஜுலை 18

மேற்கு வங்காளத்தில் பிரதமர் மோடி பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் கூடாரம் சரிந்து விழுந்த விவகாரம் தொடர்பாக மாநில அரசிடம் அறிக்கை கேட்டுள்ளது மத்திய அரசு.

மேற்கு வங்காளம் மாநிலம் மிட்னாபூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பேசினார். அவர் உரையாற்றிய போதே, பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தின் ஒரு பகுதி சரிந்து விழுந்தது.

இதில் பலர் சிக்கிக் கொண்டனர். 90இற்கும் மேற்பட்டோர் லேசான காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை பிரதமர் மோடி நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறினார்.


இந்நிலையில், மேற்கு வங்காளத்தில் பிரதமர் மோடி பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் கூடாரம் சரிந்து விழுந்த விவகாரம் தொடர்பாக மாநில அரசிடம் அறிக்கை கேட்டுள்ளது மத்திய அரசு.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சக அதிகாரிகள் கூறுகையில் –

பிரதமர் மோடி பங்கேற்ற கூட்டத்தில் மேடை சரிந்து விழுந்த விவகாரம் தொடர்பாக மேற்கு வங்காள் மாநில அரசிடம் அறிக்கை கேட்டுள்ளோம் எனத் தெரிவித்தனர்.

(கு)

# எட்டு வழிச் சாலைக்கு ரஜனி ஆதரவு; அ.தி.மு.கழகத்தின் நாளேடு பாராட்டு



8 வழிச் சாலை திட்டத்துக்கு ஆதரவு அளித்த ரஜனிக்கு அ.தி.மு.க.வின் நாளேடான 'புரட்சித் தலைவி நமது அம்மா' பாராட்டு தெரிவித்து உள்ளது.

எட்டு வழி பசுமைச் சாலைத் திட்டம் நாட்டுக்கு நலம் பயக்கும் திட்டம் என்று சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் உண்மையை உரக்கச் சொல்லி இருக்கிறார்.

மேலும், கழக அரசின் கல்விப் புரட்சியையும் அவர் வெகுவாக பாராட்டியும் இருக்கிறார். இதுஅரசியலுக்கு அப்பாற்பட்ட அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது.

உச்சி வெயில் அடித்தாலும், ஓங்கி மழை கொட்டினாலும், அத்தனைக்கும் காரணம் ஆளுங்கட்சிதான் என்று எதற்கெடுத்தாலும் எதிர்ப்பு தெரிவிக்கும் உள்நோக்கம் கொண்ட சக்திகளுக்கு மத்தியில் அரசியல் சுயலாபங்களை தவிர்த்து, தமிழக அரசின் நன்நோக்கத்தை ரஜனிகாந்த் உரைகல்லாக நின்று உரசிப் பார்த்து வரவேற்று இருக்கின்றமை பாராட்டுக்குரியது.

ஏற்கனவே, தூத்துக்குடி ஸ்டெர்லைட் கலவர விவகாரத்திலும், அரசின் மீது அபாண்ட பழிபோட்டு அரசியல் லாபம் தேட தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் வெறி கொண்டு அலைந்த நிலையில் அப்போதும் ரஜனிகாந்த் களத்தின் உண்மையை உள்வாங்கி நிஜத்தையே பேசினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் கலவரம் ஏற்படுத்த தீவிரவாதிகள் சதி: பொன்.ராதாகிருஷ்ணன் மீண்டும் குற்றச்சாட்டு!



வேறு மாநிலங்களில் இருந்து வந்து தமிழகத்தில் கலவரம் ஏற்படுத்த தீவிரவாதிகள் சதிசெய்துள்ளனர் என்று பொன்.ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் தீவிரவாதிகள் ஊடுருவி இருக்கின்றனர் என்றும் அவர்களை ஒடுக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார்.

நாகர்கோவில் வடசேரி அண்ணா விளையாட்டரங்கம் முன்பு மத்திய அரசின் 4 ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடந்தது.

இந்த கூட்டத்தில் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்நாட்டில்வளர்ச்சிதிட்டங்களை செயல்படுத்துவதற்கு தடையாக இருப்பது அரசியல் கட்சியினர் அல்லர். வன்முறை, கலவரம் போன்றவற்றை உருவாக்க வேண்டும், அதன் மூலம் திட்டத்தை தடுக்க வேண்டும் என செயல்பட்டு வருபவர்களைத்தான் நான் எதிர்க்கிறேன்.

ஏற்கனவே தமிழகத்தில் பயங்கரவாதிகள் பயிற்சி முகாம்கள் அமைத்து செயல்படுகின்றனர் என நான் கூறி வந்தேன். இதுதொடர்பாக தமிழக அரசை பலமுறை எச்சரித்தும் தீவிரவாதத்தை தடுக்க அரசு தவறி விட்டது. இதனால் தீவிரவாதிகளின் செயல்பாடு தற்போது அதிகரித்து வருகிறது.

மீத்தேன் திட்டம், நியூட்ரினோ திட்டம், கெயில் எரிவாயு திட்டம், ஸ்டெர்லைட் ஆலை ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் கூட பயங்கரவாதிகள் ஊடுருவி தான் பிரச்சினை ஏற்படுத்தி உள்ளனர். ஸ்டெர்லைட் ஆலையை திறக்கும் முன்பே அதற்கு எதிராக நான் 5 நாள்கள் உண்ணாவிரதம் இருந்தேன். அப்போது என்னை வலுக்கட்டாயமாக பொலிஸார் அப்புறப்படுத்தினர். தற்போது ஸ்டெர்லைட்டுக்கு எதிரான போராட்டத்தில் 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்தக் கலவரத்தின் பின்னணியில் பயங்கரவாதிகள் தொடர்பு இருப்பதாக பொலிஸார் கருதுகிறார்கள்.

எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது தமிழகத்தில் நக்சலைட்டுகளை ஒழிக்க பொலிஸ் அதிகாரி தேவாரத்துக்கு முழு அதிகாரம் கொடுத்தார். அதன் விளைவாக நக்சலைட்டுகள் ஒழிக்கப்பட்டனர். இங்கிருந்து ஓடி ஆந்திரா மற்றும் மற்ற மாநிலங்களுக்குச் சென்றனர்.

ஆனால் இன்று அந்த நிலை வேறு. வேறு மாநிலங்களில் இருந்து நக்சலைட்டுகள் தமிழகத்துக்குள் ஊடுருவி வருகிறார்கள். அவர்கள் தமிழகத்தில் கலவரத்தை ஏற்படுத்த சதி செய்துள்ளனர். தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவதால் அதை பயன்படுத்தி இளைஞர்களை தீவிரவாதிகள் மூளைச்சலவை செய்கிறார்கள். தீவிரவாதிகள் விவகாரத்தில் வேடிக்கை பார்க்காமல் சட்டம் – ஒழுங்கை பாதுகாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஸ்டெர்லைட் ஆலை ஊழியர்களை மீள அழைத்த காரணம் என்ன?

## நிர்வாகத்தினர் விளக்கம்

தூத்துக்குடிக்கு ஸ்டெர்லைட் ஆலை ஊழியர்களை மீண்டும் அழைத்தமை ஏன்? என்பது குறித்து ஆலை நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மே 22 ஆம் திகதி கலெக்டர் அலுவலகம் முற்றுகை போராட்டம் நடந்தபோது பொலிஸார் துப்பாக்கிச் சூடு மற்றும் தடியடி நடத்தினர். இதில் 13 பேர் பலியாயினர். அதைத் தொடர்ந்து மே 28 ஆம் திகதி தமிழக அரசு உத்தரவின் பேரில் ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டது. இதனால் அந்த ஆலையில் பணிபுரிந்து வந்த பெரும்பாலான ஊழியர்கள் தங்களது சொந்த ஊர்களுக்குச் சென்றனர்.

இதற்கிடையே ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம், ஊழியர்களை சந்திக்க முடிவு செய்தது. அதன்படி அனைத்து ஊழியர்களுக்கும் நிர்வாகம் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஸ்டெர்லைட் ஊழியர்கள் பலர் மீண்டும் தங்களது குடியிருப்புக்கு நேற்றுமுன்தினம் திரும்பினர். இதனால் தூத்துக்குடியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து ஸ்டெர்லைட் நிர்வாகம் தரப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ள கஷ்டமான சூழ்நிலையில் ஊழியர்கள் தொடர்ந்து எங்களுடன் இருக்கின்றமை பெருமையாக உள்ளது. அதே நேரத் தில் ஆலை தொடர்பாக தற்போது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள், நடந்து வரும் நிகழ்வுகள் குறித்து ஊழியர்களுக்கு தெரிவிப்பது எங்கள் கடமை. இதனால் அனைத்து ஊழியர்களையும் வரவழைத்து உள்ளோம். இது வழக்கமான ஒரு நிகழ்வு தான்.

தற்போது அரசு உத்தரவுப்படி ஆலையில் இருந்து இரசாயனப் பொருள்கள் அகற்றப்பட்டு வருகின்றன. இது குறித்தும், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் ஊழியர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னையில் சிறுமி மீது பலாத்காரம்:

# அடுக்குமாடி ஊழியர் 17 பேர் கைதாகி நீதிமன்ற காவலில்!

சென்னையில் 12 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட 17 பேரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சென்னை அயனாவரத்தில் உள்ள பிரபல அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 12 வயதான சிறுமி 7 ஆம் வகுப்பு படிக்கிறார். காது கேட்கும் திறன் குறைபாடு உள்ள அந்த மாணவியின் வெகுளித்தனத்தை பயன்படுத்தி, குடியிருப்பின் லிப்ட் ஊழியர்கள் 4 பேர் முதலில் அந்த சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். பின்னர் மிரட்டி தங்கள் ஆசைக்கு இணங்க வைத்துள்ளனர். இதுதவிர குடியிருப்பில் காவல் பணிக்கு வரும் காவலாளிகள், பிளம்பர்கள் என அங்கு வேலை பார்க்கும் நபர்களும் சிறுமியை பலாத்காரம் செய்துள்ளனர்.

ஏழு மாத காலமாக நீடித்த இந்த கொடுமை சம்பவம் தெரியவந்ததும் பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் அளித்த புகாரின் அடிப்படையில் அயனாவரம் பொலிஸார் அதிரடி விசாரணையை தொடங்கினர். சிறுமிக்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையிலும், அவர் பல நபர்களால் பலாத்காரம் செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

'லிப்ட்' ஊழியர்கள், காவலாளிகள் என மொத்தம் 24 பேரை விசாரணை வளையத்தில் கொண்டுவந்து விசாரணை நடத்திய பொலிஸார் 17 பேரை கைது செய்தனர்.


அவர்களை சைதாப்பேட்டையில் உள்ள நீதிபதி வீட்டில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி, குற்றம்சாட்டப்பட்ட 17 பேரையும் 15 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். இதையடுத்து அவர்கள் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

# கேரளாவில் கனமழை 11 பேர் உயிரிழப்பு!

கேரளாவில் பெய்து வரும் தென்மேற்கு பருவமழையால் 12 வயது சிறுவன் உட்பட 11 பேர் பலியாகியுள்ளனர். இந்த கன மழை காரணமாக 4 மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

கேரளாவில் மே மாத இறுதியில் தொடங்கிய தென்மேற்கு பருவமழை கடந்த 2 வாரங்களுக்கு முன்பு தீவிரம் அடைந்தது.

கேரளாவின் பாலக்காடு, கோட்டயம், இடுக்கி, பத்தினம் திட்டா, கோழிக்கோடு, வயநாடு மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. மலை கிராமங்களிலும் மழை பெய்து வருவதால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.



மழையுடன் சூறைக்காற்றும் வீசுவதால் பல இடங்களில் மரங்கள் முறிந்தன. மின்கம்பங்கள் சாய்ந்தன. ஆறு,கால்வாய் மற்றும் கழிவு நீர் ஓடைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

வீடுகள் இடிந்தமையாலும், மரங்கள் முறிந்து விழுந்தமையாலும் சிறுவன் உட்பட 11 பேர் பலியாகி உள்ளனர். இதில், மின்சாரம் தாக்கியும், வெள்ளம் இழுத்துச் சென்றதிலும் இவர்கள் பலியாகியுள்ளனர்.

## விஜயகலாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசேட குழுவைச் சேர்ந்த – பொலிஸார் யாழ்ப்பாண ஊடக வியலாளர்களிடம் விசாரணை களை முன்னெடுத்த பின்னர் நேற்று வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வீ.விக்கினேஸ் வரனிடமும் ஒன்றரை மணி நேரம் விசாரணைகளை மேற் கொண்டனர்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தமிழீழ விடுத லைப்புலிகளை மீள உருவாக்க வேண்டுமெனும் வகையிலான கருத்தொன்றை விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வில் வெளிவிவ கார அமைச்சர் மற்றும் உள்நாட் டலுவல்கள் அமைச்சர், வடக்கு முதலமைச்சர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அவரது உரைக்குத் தெற்கில் கடுமையான எதிர்ப்புக்கள் ஏற்பட்டன. அதனை அடுத்து அவர் தனது அமைச்சுப் பத வியை இராஜினாமாச் செய் திருந்தார்.

தொடர்ந்து இவ் விடயம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நிகழ்வில் கலந்து கொண் டிருந்த வடக்கு மாகாண முதல மைச்சர் மற்றும் ஊடகவியலா ளர்களிடம் கொழும்பில் இருந்து வருகை தந்த – திட்டமிட்ட குற் றங்களைத் தடுக்கும் விசேட குழுவைச் சேர்ந்த – பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் விசாரணை களை மேற்கொண்டனர்.

விஜயகலாவின் உரை குறித்த செய்திகளை வெளிக் கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் நேற்று யாழ் பொலிஸ் நிலை யத்திற்கு அழைக்கப்பட்டு விசா ரிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து யாழ் கோவில் வீதியிலுள்ள முதல மைச்சரின் இல்லத்துக்குச் சென்று முதலமைச்சரிடமும் சுமார் ஒன்றரை மணி நேரம் விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டனர். இதே போன்று இன்னும் பலரிடமும் விசாரணைகள் முன்னெடுக் கப்படவுள்ளன என்றும் தெரி விக்கப்படுகின்றது.

## பாதாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

மேற்படி ஐந்து பாதாள உலகத் தலைவர்களையும் சம்பந் தப்பட்ட அமைச்சர் பாதுகாக் கின்றமையால் அவர்களைக் கைது செய்ய முடியாமல் இருப் பதாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர் என்றும் அச்செய்தி யில் கூறப்பட்டிருந்தது.

"மேற்படி செய்தியை வெளி யிட்ட அந்த ஊடகம், அத்தக வலை வெளியிட்ட பொலிஸ் அதி காரி யார் என்ற விவரத்தைத் தெரிவிக்கவில்லை. ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து மேலதிக விவரங்கள், தகவல் களைத் தருமாறு மேற்படி ஊட கம் கோரப்பட்டுள்ளது." – என் றும் பிரதமர் கூறினார். (உ)

## மணிவண்ண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஓகஸ்ட் 3ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

யாழ். மாநகரசபை எல்லைக் குள் வசிக்காத மணிவண்ணன் அந்தச் சபையில் பிரதிநிதித்து வப்படுத்த முடியாது எனத் தெரி வித்து வாக்காளர் ஒருவர் சார் பில் தொடரப்பட்ட இந்த வழக்கு நேற்று கொழும்பு மேன்முறை யீட்டு நீதிமன்றத்தில் அதன் தலைவர் நீதியரசர் பத்மன் சூரசேன, நீதியரசர் அர்ஜுன ஜெயசேகர ஆகியோர் முன்னி லையில் எடுத்துக் கொள்ளப்பட் டது.

அப்போது மனுதாரர் சார் பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகி மனுதாரர் தரப்பு வாதத்தை முன்வைத் தார்.

எதிர்மனுதாரான மணிவண் ணன் சார்பில் ஜனாதிபதி சட்டத் தரணியான சி.வி.வி. புவிதரன் ஆஜரானார்.

மணிவண்ணன் உறுப்பின ராகச் செயற்படுவதற்கு எதி ராக இடைக்கால உத்தரவு எதும் வழங்க வேண்டும் என்ற வாதத்தை மனுதாரர் தரப்பு முன்வைக்குமானால் அது தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனை ஒன்றைச் சமர்ப் பிக்கத் தாங்கள் விரும்புகின் றனர் எனசட்டத்தரணி புவிதரன் தெரிவித்தார்.

அதை சுமந்திரன் ஆட் சேபிக்கவில்லை.

எதிர்மனுதாரர் தங்கள் ஆட் சேபனையை மனுதாரருக்கான பிரதியுடன் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க அனுமதித்த நீதியரசர்கள், அது தொடர்பில் மனுதாரர் ஏதேனும் பதில் தர விரும்பின் அதை ஒகஸ்ட் 3ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யவும் அனுமதித்து வழக்கை அத்திகதிக்கு ஒத்தி வைத்தனர். (உ)

## அமைச்சரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் ஒருவரின் மெய்ப் பாதுகாவலர்களாக இடம் எடுத் துப் பாதுகாப்பாக உள்ளனர்.

– இந்தத் தகவலை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் வெளி யிட்டிருக்கின்றார்.

பாதாள உலகக் கோஷ்டி களை மடக்கி வரும் பொலிஸ் தடுப்புப் பிரிவினர் இந்த ஐந்து பாதாள உலகக் குழுத் தலை வர்களும் சம்பந்தப்பட்ட அமைச் சருடன் நெருக்கமாக இருக்கும் படங்களை ஆதாரமாகப் பெற் றுள்ளனர்.

கேரளாக் கஞ்சாவுடன் பிடிபட்ட ஒரு சந்தேகநபரை விடுவிக்கும் படி இந்த அமைச்சர் பொலி ஸாருக்கு அண்மையில் அழுத் தம் கொடுத்தார் என்றும் கூட செய்திகள் வெளியாகி உள் ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மனைவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆண்டு படகுமூலம் சென்ற திலீபன் என்ற இலங்கைத் தமி ழரை திங்கட்கிழமை நள்ளிர வில் ஆஸ்திரேலிய அதிகாரி கள் நாடு கடத்தியுள்ளனர்.

இவ்வருட ஆரம்பத்தில் குடி யேற்றவாசிகளுக்கான தடுப்பு முகாமிற்கு கொண்டு செல் லப்பட்ட இவரை நாடு கடத்துவ தற்கான அறிவிப்பு கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகி யிருந்த நிலையில் அவர் தற் போது நாடு கடத்தப்பட்டுள்ளார்.

கடந்தபுதன்கிழமை திலீபனின் மனைவிக்கும் குழந்தைக்கும் பாதுகாப்பான புகலிட தொழில் விசாவை வழங்கிய அதிகாரிகள் பின்னர் தந்தையை நாடு கடத் தியுள்ளனர்.

திலீபன் இவ்வாறு நாடு கடத் தப்பட்டுள்ளமையால் அவர் தனது குடும்பத்தை நிரந்தர மாகப் பிரிந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித் துள்ளனர்.

செவ் என அழைக்கப்படும் விசாவை தாய்க்கும் குழந் தைக்கும் ஆஸ்திரேலியா வழங் கியுள்ள போதிலும் இந்த விசா குடும்பங்கள் மீளஇணைவதற்கு அனுமதிக்கவில்லை என அவர் கள் தெரிவித்துள்ளனர்.

திலீபனின் மனைவி தனது கணவரை ஆஸ்திரேலியாவிற்கு மீண்டும் அழைக்க முடியாது எனவும் தெரிவித்துள்ள மனித உரிமை ஆதரவாளர்கள் திலீ பனின் மனைவிக்கு உயிராபத்து உள்ளது என ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளதால் அவர் இலங்கைக்குத் திரும்பிசெல்ல முடியாது எனவும் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி யுத்தத்தில் திலீபனின் தந்தையும் சகோ தரரும் கொல்லப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

இலங்கையில் தான் கடத் தப்பட்டு சித்திரவதை செய்யப் பட்டார் என ஆஸ்திரேலிய அதி காரிகளிடம் திலீபன் தெரிவித் திருந்தார் என்றும் கூறப்பட்டது.

## 18 இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேர்த் நகரில் இருந்து நாடு கடத்தப்பட்ட இவர்களை ஏற்றிய சிறப்புவிமானம், நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்தது.

18 அகதிகளுக்கும், பாது காப்பாக தலா இருவர் வீதம், 36 ஆதிஸ்ரேலிய பாதுகாப்பு அதி காரிகளும், இந்த சிறப்பு விமா னத்தில் வந்தனர்.

இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட 18 இலங்கை அகதிகளும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

## டெனிஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாம் வாரந்தம் அனுப்பும் கேள்வி – பதில் பகுதியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் இடம்பெற்றுள்ள முக்கிய இரு கேள்வி பதில்கள் வருமாறு:–

**1.கேள்வி** – வடமாகாணசபை கலைக்கப்படும் நிலை ஏற்பட் டுள்ளது என்று அவைத்தலை வர் கூறுகின்றாரே. அதில் உண்மையுள்ளதா?

**பதில்** – இல்லை. ஒரு மாகா ணத்தின் ஆளுநர் தானே பிழை செய்து விட்டு தன் பிழையை வைத்தே மாகாண ஆட்சியைக் கலைக்க முடியுமென்றால் மத் திய அரசாங்கம் அதைச் செய்தே எல்லா மாகாண சபைகளையும் கலைத்துவிடலாம். மேன்முறை யீட்டுமன்றின் தீர்ப்புக்குக் கார ணம் எமது ஆளுநர் அரச வர்த்த மானியில் டெனிஸ்வரனை நான் நீக்கியது பற்றி பிரசுரிக்காமை. வடமாகாணசபை சார்பாக ஆளு நர் தானே ஒரு முக்கியமான செயலைச் செய்யாதுவிட்டு அதை முன்வைத்து வடமாகாண சபையை கலைக்க சட்டம் இடம் கொடுக்காது. அவைத்தலைவர் தொடர்ந்து எமது பதவிக்காலம் வரையில் அவைத் தலைவரா கவே இருக்கலாம்!

**2.கேள்வி** – முழுமையான அமைச்சரவையை உருவாக்கும் ஆலோசனையை ஆளுநருக்கு வழங்குங்கள் என்று உறுப்பினர் கள் நேற்றுமுன்தினம் தீர்மானம் எடுத்துள்ளார்களே?

**பதில்** - முதலமைச்சருக்கு நியமிக்கும் அல்லது பதவி இறக் கும் உரித்தில்லை என்று மேன் முறையீட்டு நீதிமன்றம் கூறி யிருக்கும் போது நான் எவ்வாறு ஆலோசனை வழங்குவது? சட்டத்திற்குப் புறம்பாக நட வடிக்கை எடுக்கப் பண்ணி என்னை மாட்டிவிடப் பார்க் கின்றார்களா எமது உறுப்பினர் கள்? ஆளுநர் செய்த பிழையை ஆளுநரே சரி செய்ய வேண்டும். டெனிஸ்வரனை நான் பதவி நீக்கம் செய்தமையை அரச வர்த்தமானியில் பிரசுரிக்காத குறையை இப் பொழுதும் நீக்க லாம். அதாவது 2017 ஒகஸ்ட் 20 ஆம் திகதி தொடக்கம் பயன் பாட்டிற்கு வரும் வகையில் இப் பொழுதும் கடந்த காலத்தை அளாவிய விதத்தில் அரச வர்த்த மானியில் பிரசுரம் இடம்பெற ஆளுநர் நடவடிக்கை எடுக்க லாம். அதன் பின் குறித்த வர்த்த மானி அறிவித்தலை உச்ச நீதி மன்றத்திற்கு எடுத்துக்காட்டி மேன்முறையீட்டுத் தீர்மானத் தைப் புறம் வைக்கலாம்.

(முழுமையான கேள்வி – பதில் விடயங்கள் 4ஆம் பக்கத் தில் தனியாகப் பிரசுரமாகியுள் ளன.)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அப்பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்படும் ஆய்வு நடவடிக் கைகளின்போது அகழப்பட்டகுழி யொன்றினுள் இருந்தே இந்த மனித எலும்புக்கூட்டு தொகுதி கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

இதனை தொடர்ந்து அகழ்வா ராய்ச்சிப் பணிகள் இடைநிறுத் தப்பட்டுள்ளன. அத்துடன் இதனை மூடி விவகாரத்தை முடக்கிவிட தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் முற் பட்டுள்ளனர் என்றும் தெரிவிக் கப்படுகின்றது. இந்த மனித எலும்புக்கூட்டுத் தொகுதி தொல் லியலுடன் தொடர்புபட் டதா அல்லது அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தின் புதைகுழியாவெனத் தெரியவரு வில்லை என்றும் கூறப்பட்டது.

முன்னதாக யாழ்.கோட்டை யினை அண்மித்த துரையப்பா விளையாட்டரங்கிலும் பாரிய மனிதப்புதைகுழி கண்டறியப் பட்டிருந்த போதும் கால ஓட் டத்தில் அதுவும் விசாரணை யின்றிக்கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருவடிநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சடலங்களைப் புதைக்கும் புதைகுழிகள் அமைந்துள்ள இடத்தில் மணல் அகழப்பட்டமை யால் எலும்புக்கூடுகள் வெளியே வந்துள்ளன. எலும்புக் கூடு களின் எச்சங்களுடன் சேர்த்தே மணல் ஏற்றிச் செல்லப்பட்டுள் ளது எனவும் மக்கள் தெரிவித் தனர்.

திருவடிநிலை புனித கடற் கரையோரத்தில் உள்ள இந்து மயானத்திற்கு சமீபமாக சட லங்களைப்புதைக்கும் இடத்தில் நேற்றுக் காலை முதல் இரு டிப் பர்களில் மணல் ஏற்றிச் செல் லப்பட்டுள்ளது. இதை அறிந்த வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் து.சுஜிந்தன் உட னடியாக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந் திரனின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இவ்விடயத்தை பிரதேச செயலாளருக்குஅறிவிக்குமாறு தவிசாளர் கூறினார் என சுஜிந்தன் தெரிவித்தார்.

எனினும், அந்த டிப்பர் வாக னங்கள் தொடர்ந்தும் மணல் அகழ்ந்து சென்றதை அவ தானித்த காட்டுப்புலம் – பாண்ட வெட்டை இளைஞர்கள் மாலை 6.00மணியளவில் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று ஒரு டிப்பரையும் ஒரு ஜே.சி.பி வாக னத்தையும் மடக்கிப் பிடித்தனர்.

இது தொடர்பாக அறிந்த வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான ந.பொன் ராசா, செ.கிருஷ்ணராசா ஆகி யோர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்றனர். இந்த விடயம் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு மீண்டும் தெரியப்படுத்தப்பட்டது. அவர் வட்டுக்கோட்டைப் பொலி ஸாருக்கு அறிவித்தார். சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சாரதிகள் இருவரையும் கைது செய்தனர். அவர்களையும் வாகனங்களையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

இரு சாரதிகளும் இன்று நீதி மன்றில் முற்படுத்தப்படுவர் எனவும் வாகனங்களும் நீதி மன்றில் பாரப்படுத்தப்படும் என வும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, 'வழக்கம்பரை யில் கட்டப் பொருள்கள் விற் பனை நிலையம் ஒன்றை நடத்தி வருபவரின் டிப்பர் வாகனத் திலேயே மணல் ஏற்றிச் செல்லப் பட்டுள்ளது. கடந்த காலங்களி லும் இவர்கள் இந்த இடத்தில் மணல் அகழ்ந்தனர். அப்போது நாம் பிடித்து வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத் தோம். பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவில்லை. டிப்பரையும் சாரதிகளையும் விடுவித்தனர். இந்தத் தடவை யும் அவர்கள் உரியவாறு செயற்படுவார்களாஎனஎமக்குச் சந்தேகமாக உள்ளது' என வாகனங்களை மடக்கிப் பிடித்த இளைஞர்கள் விசனம் வெளி யிட்டுள்ளனர்.

## இழப்பீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யுத்தத்தினால் ஏற்பட்ட அனர்த் தங்களில் பாதிக்கப்பட்டோருக் கு இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப் பதற்கு வசதியாக அத்தகை யோரை அடையாளம் காண பதற்கும், அவர்களுக்குரிய இழப் பீடுகளை வழங்கும் சட்ட நடவடிக் கைகளை மேற்கொள்ளவும் இந்த அலுவலகம் உருவாக்கப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின் றது. (உ)

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் குற்றச்சாட்டி லிருந்து விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபர் மனநிலை பாதிக்கப்பட்டவர். அவருக்கும் இந்தக் கொலைக்கும் எந்த வொரு தொடர்பும் கிடையாது. கொலைச் சம்பவ தினத்தன்று கொலையாளி வீட்டுக்குள் நுழைவது, வீட்டிலிருந்து வெளி யேறுவது என்பன பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது. அந்த நபர் இவர் அல்லர் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. எனவே சந்தேக நபரை வழக்கிலிருந்து விடு விக்கவேண்டும் என்று சட்டத் தரணி கனகரட்ணம் சுகாஷ் நேற்று நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார்.

பொலிஸாரால் சந்தேக நபருக்கு எதிராக உரிய ஆதா ரங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில் சட்டத்தரணி சுகா ஷின் சமர்ப்பணத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்று சந்தேக நபரை வழக்கிலிருந்து விடு வித்தது.

மானிப்பாய் கல்லூரி ஒழுங்கை என்ற விலாசத்தில் தனித்து வாழும் நாகரத்தினம் குமாரசாமி (வயது–88) என்ப வரது வீட்டில் வைத்து அவரைப் பராமரிப்பதற்கு பணிக்கு அமர்த் தப்பட்ட வயோதிபப் பெண் கடந்த மாதம் 28ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

மானிப்பாய், சங்கபிள்ளை வீதியைச் சேர்ந்த தம்பையா லீலாதேவி (வயது – 60) என்ற வயோதிப் பெண்ணே கொலை செய்யப்பட்டார்.

பிச்சைக்காரர் போல் வந்த நபர் கழுத்தில் கத்தியால் அறுத் துக் கொலை செய்துவிட்டுத் தப்பி சென்று விட்டார்.

முதலில் ஒருவர் தர்மம் எடுப்பவர் போல் வந்து நோட்டம் பார்த்து விட்டுச் சென்றுள்ளார். அவருக்குத் தர்மம் வழங்கப்பட் டது. சில நிமிடங்களில் மீண்டும் அந்த வீட்டுக்குள் புகுந்து இந்த கொலையைச் செய்துள்ளார் அவர்.

சம்பவம் தொடர்பாக சந் தேகத்தின் பேரில் ஆனைக் கோட்டைப் பகுதியில் நடமாடிய மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு வரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்தனர்.

அந்த நபர் நேற்றுவரை மல் லாகம் நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்தார். அவர் நேற்று நீதிமன் றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போதே சட்டத்தரணி சுகாஷின் சமர்ப்பணத்தை ஏற்று சந்தேகநபரை வழக்கிலிருந்து விடுவித்து மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். (உ)

# அற்புதமான வெற்றி!



## பிரான்ஸ் பயிற்சியாளர் மகிழ்ச்சி



உலகக் கிண்ணத்தை வென்றது அற்புதமானது என்று பிரான்ஸ் கால்பந்து அணியின் பயிற்சியாளர் டெஸ் சாம்ப்ஸ் தெரிவித்தார்.

ரஷ்யாவில் அரங்கேறிய 21 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் மொஸ்கோவில் ஞாயிறு இரவு நடந்த இறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் அணி 4 –2 என்ற கோல் கணக்கில் குரோஷியாவை வீழ்த்தி 2ஆவது முறையாக உலகக் கிண்ணத்தை உச்சி முகர்ந்தது. ஏற்கனவே பிரான்ஸ் அணி 1998 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணத்தை வென்று இருந்தது.

பிரான்ஸ் அணி கிண்ணத்தை வென்ற மறு வினாடியே பிரான்ஸ் நாடு முழுவதும் கொண்டாட்டம் களை கட்டியது. ரசிகர்கள் தெருக்களுக்கு திரண்டு வந்து உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். தேசிய கொடிகளுடன் தெருக்களில் வெற்றி உலா வந்தனர். பாரிஸ் உட்பட



சில இடங்களில் ரசிகர்களின் வெற்றி கொண்டாட்டம் வரம்பு மீறியது. சிலர் கடைகளை அடித்து நொறுக்கினார்கள். ரசிகர்களின் கொண்டாட்டம் எல்லை மீறியதால் பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி ரசிகர்களைக் கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

வெற்றிக்குப் பிறகு பிரான்ஸ் உதைபந்து அணியின் பயிற்சியாளர் டெஸ் சாம்ப்ஸ் கருத்து தெரிவிக்கையில் –

“உலகக் கிண்ணத்தை வென்றது உண்மையிலேயே அற்புதமானதாகும். இறுதிப்போட்டியில் நாங்கள் பெரும் அளவில் விளையாடவில்லை. இருப்பினும் எங்களது மன உறுதியை வலுவாக வெளிப்படுத்தினோம்” என்றார்.

உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய பிரான்ஸ் உதைபந்து அணி நேற்றுமுன்தினம் நாடு திரும்பியது. பாரிஸ் நகரில் வீரர்கள் திறந்த பஸ்ஸில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வீரர்களை வரவேற்க ஏராளமான ரசிகர்கள் திரண்டு இருந்தனர்.

பிரான்ஸ் அணியின் நட்சத்திர வீரர் கிரிஸ்மான் அளித்த பேட்டியில், “வெற்றிக் களிப்பில் நான் எங்கு இருக்கிறேன் என்பதே தெரியவில்லை. சிறப்புக்குரிய இந்த வெற்றி மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. உலகக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டம் என்பதால் நாங்கள் தொடக்கத்தில் சற்று பயத்துடன் தான் செயற்பட்டோம். போகப்போக இயல்பு நிலைக்கு திரும்பி தாக்குதல் ஆட்டத்தைத் தொடுத்தோம். அதில் நாங்கள் வித்தியாசத்தை காட்டினோம். உலகக் கிண்ணத்தை எங்கள் நாட்டுக்கு கொண்டு செல்லும் ஆவலுடன் இருக்கிறோம்’ என்று தெரிவித்தார்.

பிரான்ஸ் அணியின் நடுகள வீரர் பால் போக்பா கருத்து தெரிவிக்கையில், “உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று எனது இளம் வயதிலேயே கனவு கண்டேன். அது நிறைவேறி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்களால் இந்தக் கிண்ணத்தை வென்று நாட்டுக்கு பெருமை சேர்க்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. இறுதியாட்டம் தொடங்குவதற்கு முன்பு நமது உலக கிண்ணக் கனவு, நனவாக இன்னும் 90 நிமிடங்கள் தான் இருக்கின்றன என்று எல்லோரிடமும் தெரிவித்தேன்”.– என்றார்.

# சிறிய நாடு: பெரிய கனவு




88 வருட ஃபிபா உலகக் கிண்ண உதைபந்து வரலாற்றில் வெறும் 4.5 லட்சம் மக்கள் தொகையை கொண்ட குரோஷியா நாடு இறுதிப் போட்டிக்கு முன்னேறி அனைவரையும் வியக்க வைத்தது. ஐரோப்பிய கண்டத்தைச் சேர்ந்த சிறிய நாடு ஒன்று உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் முதன் முறையாக நுழைந்து சாதனை படைத்த போதிலும் அந்த அணியால் கிண்ணத்தை வென்று வரலாற்றில் முத்திரை பதிக்க முடி யாமல் போனது. இறுதிப் போட்டியில் 2 – 4 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியி டம் வீழ்ந்தமையால் முதன்முறையாக மகுடம் சூடும் வாய்ப்பை இழந்தது குரோஷியா.

அந்த அணியின் பயிற்சியாளர் ஸ்லாட்கோடலிக் கூறும்போது – நாங்கள் பயணம் செய்யும் பஸ்ஸில் இடம்பெற்ற வாசகம், ‘பெரிய கனவை கொண்டுள்ள சிறிய நாடு நாங்கள்’ என்பது தான். இது எல்லோருக்கும் சிறந்த செய்திதான். நீங்கள் கடினமாக உழைத்தால், உங்களால் சிறந்த வீரர்களை உருவாக்க முடியும், அதன் மூலம் சிறந்த முடிவுகளைப் பெற முடியும். இது சாத்தியமாகும் என்று நீங்கள் நம்ப வேண்டும். சிலநேரங்களில் இந்த எண்ணங்கள் கீழே சரியலாம். ஆனால் கனவு மற்றும் லட்சியங்களைக் கொண்டு அதனைப் பின்தொடர வேண்டும். அதன் பின்னர் ஒருவேளை உதைபந்திலோ அல்லது பொது வாழ்விலோ கனவுகள் மெய்ப்படும்.

ஒருபோதும் நீங்கள் விட்டுக்கொடுக்கக் கூடாது, அதேபோன்று ஒருபோதும் நம்பிக்கை கொள்வதையும் நிறுத்திவிடக் கூடாது. இறுதிப் போட்டியில் 4 – 1என நாங்கள் பின் தங்கியிருந்த போதும், நான் நம்பிக்கை கொள்வதை நிறுத்தவில்லை. இதுதான் வாழ்க்கை. ஒட்டுமொத்தமாக குரோஷியா, பெரிய தொடரில் சிறப்பாக விளையாடியதாகவே கருதுகிறேன். அணியில் உள்ள அனைத்து வீரர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது அணி வீரர்களையும், நாட்டையும் நினைத்து பெருமை அடைகிறேன்.– என்றார்.

ஆர்ஜென்ரீனா நாட்டு மத்தியஸ்தர் நெஸ்டர் பிட்டானா, பிரான்ஸ் அணிக்கு பெனால்டி உதை வழங்கியது விவாதப் பொருளாகி உள்ளது குறித்து ஸ்லாட்கோ டலிக் கூறுகையில்–

பொதுவாக இதுபோன்ற விடயங்கள் குறித்து நான் பேசுவதில்லை. இந்த விடயத்தில் எனது கருத்து என்னவென்றால், உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் பெனால்டிக் கொடுக் கக்கூடாது.– என்பதுதான்.

உலகக் கிண்ணத்தில் விளையாடிய சிறந்த விளையாட்டுக்காக எனது அணி வீரர்களை வாழ்த்தியாக வேண்டும். இறுதிப் போட்டியில் நாங்கள் ஆட்டத்தை கட்டுப்படுத்தினோம், ஆனால் பிரான்ஸைப் போன்ற வலுவான அணிக்கு எதிராக நீங்கள் தவறுகளைச் செய்ய முடியாது. நாங்கள் சற்று சோகமாக இருக்கிறோம், ஆனால் நாங்கள் செய்ததைப் பற்றி பெருமிதம் கொள்கிறோம்.– என்றார்.

நாங்கள் நன்றாக விளையாடினோம். ஆனால் பெனால்டி வாய்ப்பு எங்களை வெளியேற்றி விட்டது. பெனால்டிக்கு பிறகு மீண்டு வருவது கடினமாகி விட்டது. உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று நாங்கள் அதிகம் விரும்பினோம். ஆனால் உதைபந்து ஆட்டத்தின் மகத்துவம் இது தான். பிரான்ஸ் அணி எங்களை ஆச்சரியப்படுத்தவில்லை. நாங்கள் சுய கோலும், பெனால்டி வாய்ப்பும் அவர்களுக்கு வழங்கி விட்டோம். எனது எதிர் காலம் குறித்து தற்போது முடிவு எதுவும் எடுக்க முடியாது. நாடு திரும்பி ஓய்வுக்கு பிறகு முடிவு செய்வேன்’ என்றும் அவர் கூறினார்.

உலக க் கிண்ண உதைபந்துப் போட் டியில் 2 ஆவது இடம் பிடித்த குரோஷியா அணி நேற்றுமுன்தினம் சொந்த நாட் டுக்கு திரும்பியது. விமான நிலையத்தில் இருந்து வீரர்கள் திறந்த பஸ்ஸில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். லட்சக்கணக்கான ரசிகர்கள் திரண்டு வந்து குரோஷிய அணியினருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தனக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த

# வவுனியா வடக்கு பிரதேச செயலரும் சில உத்தியோகத்தர்களும் ஊழலாம்

## பகிரங்கக் குற்றம் சுமத்துகிறார் லிங்கநாதன்

வவுனியா வடக்குப் பிரதேச செயலாளரும் அவருடன் இணைந்து சில உத்தியோகத்தர்களும் கடந்த 8 வருடங்களாக 18 இற்கு மேற்பட்ட மோசடிகளை செய்துள்ளனர் என்று வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோகர்தர்கள் சிலர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். நான் வவுனியா வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இருந்து வெளியேறியமைக்காவும், அந்தக் கூட்டத்தில் பிரதேச செயலாளரை அவமரியாதைப் படுத்தி பேசினேன் எனவும் கூறியே அந்த ஆர்ப்பாட்டத்தை செய்திருந்தனர்.

ஆனால் அவ்வாறு இல்லை. எதிர்வரும் காலத்தில் வவுனியா மாவட்டத்தில் இடம்பெறும் வேலைத்திட்டங்களை மாகாணசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தே முன்னெடுக்கப்படும் என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில், பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இருபது கோடி ரூபா ஒதுக்கியிருந்தது. ஆனால் அது குறித்து இதுவரை மக்கள் பிரதிநிதிகளாகிய எமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. இதனால் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்தே வெளிநடப்பு செய்தேன். அத்துடன் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வரும் வகையிலும், பிரதேச செயலாளருக்கு உடந்தையாக செயற்படுபவர்களை இனங்காணுவதற்காகவுமே அவ்வாறு நடந்து கொண்டேன்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா வடக்கு பிரதேசத்தில் கடந்த 8 வருடங்களாகப் பிரதேச செயலாளரும் இன்னும் சில உத்தியோகத்தர்களும் இணைந்து மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். யுத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என ஒதுக்கப்பட்ட நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக வாழ்வாதாரம், காணி கையகப்படுத்தல், சமுர்த்தி வங்கி விடயம் என 18 மோசடி விடயங்கள் தொடர்பில் எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வவுனியா வடக்கில் குறித்த பிரதேச செயலாளாரின் மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.

குறித்த ஆதாரங்களை திரட்டி லஞ்ச, ஊழல் ஆணைக்குழு உள்ளிட்ட ஊழல் ஒழிப்பு அமைப்புக்களிடம் கையளித்துஇந்த மோசடிகளை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

எனக்கு எதிராக போராட்டம் செய்வதாக கூறி ஒரு மோசடியான பிரதேச செயலாளருக்காகப் போராட்டம் நடத்திய இளம் பட்டதாரி உத்தி யோகர்தர்களிடம் ஒரு கேள்வி கேட்கின்றேன். வவுனியா வடக்கில் குடி யேற்றங்கள் வந்த போது ஏன் ஓர் ஆர்ப்பாட்டத்தைக் கூட உங்களால் நடத்த முடியாமல் போனது? அல்லது ஏன் பாதிக்கப்படட மக்களுக்கு முழுமையாக உதவி செய்ய முடியாமல போனது?ஊழலை ஏன் தடுக்க முடியாமல் போனது? – எனக் கேள்வி கேட்கின்றேன்.

தனவந்தர்களும், அரசியல் செல்வாக்கு உடையவர்களும், வெளிநாட்டுக்காரரும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் இலகுவாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு புதன்கிழமையும் அலைந்து திரிகிறார்கள். விசாரணையின் மூலம் வவுனியா வடக்கின் மோசடிகள் அம்பலத்திற்கு வரும். – எனத் தெரிவித்தார்.

## யாழ். இந்துவில் ஆடித் திருவிழா







யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாரணர் குழுவின் ஏற்பாட்டில் 'ஆடித் திருவிழா' நிகழ்வு கல்லூரியில் ஆடிக் கூழ் மற்றும் கொழுக்கட்டையுடன் நேற்று இன்புறக் கொண்டாடப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

# றெஜீனிவாக்கு நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டம்!

## கிளி.இராமநாதபுரத்தில் நேற்று



கிளிநொச்சி, ஜீலை 18

யாழ்ப்பாணம் – சுழிபுரத்தில் மாணவி றெஜீனா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீதிகோரியும், போதை பொருளை ஒழிக்கக் கோரியும் கிளிநொச்சி இராமநாதபுரம் பாடசாலையில் மாண வர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை பாடசாலையில் இடம்பெற்ற இக் கவனவீர்ப்பு போராட்டத்தில் 'சிறுவர்கள் என்ன பாலியல் பொம்மைகளா?', 'பெற்றோரே பெரியோரே சிறுவர் எம்மை பாதுகாருங்கள்', 'உன்போதைக்கு பேதை தேவையா?', 'இன்று றெஜீனா நாளை யார்?', 'விழித்தெழுவோம் சிறுவர்களை காப்போம்', 'பள்ளி பிஞ்சுகள் பாலியல் பசுக்கு தீனிகளா?' –போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இராமநாதபுரம் கிழக்கு பாடசாலை மாணவர்களின் இந்த கவனவீர்ப்பு போராட்டம் காலை 7.30 மணிக்கு ஆரம்பித்து சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றது .

(உ–70)

## நாவற்குழி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில்

மண்டலாபிஷேக பூர்த்திவிழா இன்று புதன்கிமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி சிறப்பாக நடைபெறும். தொடர்ந்து 1008 சங்காபிஷேகமும் நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும்.

அனைவரும் வருகை தந்து நல்லருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில்.

## பகிரங்க அறிவித்தல்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது நிறுவனமாகிய **வாழ்வகம், விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்** கண் பார்வையற்ற, பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளின் மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு இயங்கி வரும் ஒரு தொண்டு ஸ்தாபனமாகும். எமது நிறுவனத்துக்காக நிதி திரட்டவோ அன்றி வேறு வழிகளில் உதவிகளைக் கோரவோ நாம் யாரையும் நியமிக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாக அறியத்தருகின்றோம். இவ்வாறிருக்க எமது நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தி ஒரு சிலர் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என அறிந்து நாம் அதிர்ச்சியும் கவலையும் அடை கின்றோம்.

இவ்வாறானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தொடர்பான தகவல்களை தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் எமது முகவரிக்கோ அன்றி, 0212240146, 0768286331 என்னும் தொலைபேசி இலக்கங்களுக்கோ உடன் அறியத்தந்து எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.வாழ்வக நிறுவனத்துக்கு உதவ விரும்புகின்ற அன்பர்கள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு உங்கள் பெறுமதி மிகு உதவிகள் உரிய இடத்தை அடைந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

0768286331

**ஆறுமுகம் ரவீந்திரன்,**
**தலைவர்,**
**வாழ்வகம்.**

பழைமை வாய்ந்த தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

01. ஆண்/ பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா?



உங்கள் பிரச்சினைகள் உங்கள் தந்தையாரோடு மனம் திறந்து பேசுவது போல பேசலாம்.

ரகசியம் பேணப்படும்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள்!!

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் பதிவு தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி காளியம்மா
கண்டி வீதி - அம்பத்தன்ன.
077 871 9408 / 077 939 5222

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.